Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 325
வெள்ளிக்கிழமை
ஐப்பசி 05 ஆம் நாள்
22 ஒக்ரோபர் 2021
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## ஒரு பிள்ளையின் தாய் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
தனக்குத்தானே தீ மூட்டிய இளம் குடும்பப் பெண், சிகிச்சை பயனளிக் காது உயிரிழந்தார்.
சாவச்சேரி மடத்தடி பகுதியைச் சேர்ந்த குணேஸ் தர்சிகா (வயது - 26) என்பவரே இவ்வாறு உயிரிழந் தார்.
15

# நீதியை நிலைநாட்டுவதில் பெரும் பின்னடைவு!

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்ரோபர் 22
"சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் என்றால் சிறைகளில் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் எவரும் சிறைப்படுத்தப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால், நாட்டில் நீதித்துறையால் நீதி நிலை நாட்டப்படுவதில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. நீதித்துறையில் விடுபாட்டு நிலைமையே அதிகமாக உள்ளது."
15

## பாடசாலைத் திறப்புக்களை வலயத்திடம் ஒப்படைக்கவும்

### திலீபன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஒக். 22
வவுனியாவில் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் பாடசாலைகளின் அனைத்துச் சாவிகளையும் வலயக்கல்விப் பணிமனை
15

## திலீபன் எம்.பிக்கு அதிகாரமில்லை

### ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 22
புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலையின் அனைத்து திறப்புக்களையும் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிப்பதற்கு நாடா
15

### யாழ்.போதனா மருத்துவமனையில்

## இந்திய இராணுவத்தினர் நடத்திய படுகொலையின் 34ஆவது நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நடை பெற்றது.
கொல்லப்பட்டவர்களின் உறவினர்
15

## காரணமின்றித் தடுத்துவைப்பா? விசேட குழுவில் முறையிடுங்கள்

### கூறுகின்றார் நீதி அமைச்சர்



கொழும்பு, ஒக். 22
"காரணமின்றித் தவறாக எவராவது கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பில் ஆராய்ந்து நீதி வழங்க ஜனாதிபதி குழுவொன்றை நியமித்துள்ளார். அவ்வாறு எவராவது தவறாக கைதாகியிருந்தால் அந்தக் குழுவில்
15

## மருத்துவமனையில் விரைவில் நினைவுத்தூபி

### பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
"யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக, விரைவில் நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்படும்" என்று, போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
15

### யாழ்.கிளிநொச்சியில்

## 3 மாதங்களில் 39 பேர் கைது!

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 22
கடந்த மூன்று மாதங்களில் மட்டும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 39பேர் இரவிரவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக்
15



### வடக்கு பாடசாலைகளில் நேற்று

## ஆசிரியர்கள் வரவு அமோகம் மாணவர்கள் வரவோ மந்தம்

யாழ்ப்பாணம், ஒக். 21
200 மாணவர்களுக்கு குறைவான எண்ணிக்கை கொண்ட பாடசாலைகள் நாடு முழுவதும் நேற்றுத் திறக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் 21 சதவீத மாணவர்களே பாடசாலைக்கு சமுகமளித்துள்ளனர். அதேவேளை, அதிபர்கள் 69 சதவீதமும், ஆசிரியர்கள் 52 சதவீதமும் சமுகமளித்துள்ளனர் என்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஆசிரியர் தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள், அதிபர்களின் வரவு 50 சதவீதத்துக்கும் அதிகமாகப் பதிவாகியுள்ளது.
வடக்கு மாகாணத்தில் 639 பாடசாலை
14

## காரைநகர் தவிசாளர் நேற்றுக் காலமானார்



கொழும்பு, ஒக். 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள காரைநகர் பிரதேச சபை
15

## தமிழ் அரசியல் கைதிகள் விரும்பும் சிறைக்கே அவர்களை மாற்றுங்கள்!

### உயர்நீதிமன்று பிறப்பித்தது கட்டளை
### லொஹான் ரத்வத்த மீது குற்றவியல் நடவடிக்கை

கொழும்பு, ஒக். 22
அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள், எந்தச் சிறை பாதுகாப்பானது எனக் கருதிச் செல்ல விரும்புகிறார்களோ அந்தச் சிறைக்கே அவர்களை இடமாற்றுமாறு உயர்நீதிமன்றம் நேற்றுக் கட்டளை வழங்கியுள்ளது. அத்தோடு, அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளு
15

### முச்சந்தி முரளி




"அப்ப பிள்ளையை போக வேண்டாம் எண்டிட்டு பணிப்புறக்கணிப்பு செய்யிறவை பள்ளிக்கூடங்களுக்கு போயிருக்கினம் போல?"

# நீண்ட நாள்களின்பின் பாடசாலைகள் திறப்பு!

**மாணவர் வரவு குறைவு ▌ஆசிரியர்கள் வரவில்லை ▌பின்னடைவான ஆரம்பம்**

கொழும்பு, ஒக். 22

**நீண்ட நாள்களின்பின்னர் நாட்டில் நேற்றுப் பல பாடசாலைகள் திறக்கப்பட்டன. ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று 200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் போராட்டத்தால் மாணவர்களின் வருகை குறைவாகவும், ஆசிரியர்களின் வருகை மிகக்குறைவாகவும் இருந்தது.**



**மன்னார்**

மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலைகளில் மாணவர்களுக்கான சுகாதார நடைமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாடசாலை தொடர்பாகவும் குறித்த பாடசாலைக்கு சமூகமளிக்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள் படையினரால் சேகரிக்கப்பட்டன.



**வவுனியா**

வவுனியாவில் 85 பாடசாலைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் போராட்டம் காரணமாக பல பாடசாலைகள் பூட்டப்பட்டிருந்தன. இதனால் பல மாணவர்கள் திரும்பிச் சென்றனர். சில பாடசாலைகள் திறக்கப்பட்டிருந்த போதிலும் மாணவர்களின் வரவு மிகக்குறைவாகவே இருந்தது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலைகள் நேற்றுத் திறக்கப்பட்ட போதிலும் மாணவர்களின் வரவு மிகக்குறைவாகவே காணப்பட்டது. சில பாடசாலைகள் அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக பூட்டப்பட்டிருந்தது. அதேநேரம் பொலிஸார், மற்றும் வலயக்கல்வி அலுவலர்கள் பாடசாலைகளை பார்வையிட்டு பாடசாலைகளின் விவரங்களை திரட்டிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. அதேநேரம் தென்மராட்சியில் 48 பாடசாலைகள் ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் 33 வீதமான பாடசாலைகளே திறக்கப்பட்டன.

**மலையகம்**

மலையகப் பகுதிகளில் சுமார் 20 வீதமான பாடசாலைகளே திறக்கப்பட்டிருந்தன.

90 வீதமான ஆசிரியர்கள் போராட்டம் காரணமாகப் பணிக்குத் திரும்பவில்லை. மாணவர்களின் வருகையிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. (ம-56-27-110-6-9)



# மாதா சொரூபம் நெடுந்தீவில் சேதம்

விசமிகள் வெறிச்செயல்

யாழ்ப்பாணம், ஒக். 22

நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐந்தாம் வட்டாரம் ஒற்றைப்பனை சந்தியில் அமைந்துள்ள மாதா சொரூபம் விசமிகளால் நேற்று மதியம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு ஐந்தாம் வட்டாரம் ஒற்றைப் பனையடி சந்தியில் நீண்ட காலமாக மக்களால் வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்த சொரூபமே அடித்துடைக்கப்பட்டது. மாதா சொரூபம் உடைந்திருப்பதைக் கண்டறிந்த மக்கள், உடனடியாக நெடுந்தீவு பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அது தொடர்பில் விசாரணைகளை நடத்தினார்கள். (ம-125)

# நடேசன் என்னும் பெயரில் கைபேசி ஊடாக மிரட்டல்!

விஜேசிறி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.22

நடேசன் என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டு நபரொருவர் கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு 12.33 மணியளவில் தனது கைபேசிக்கு தொலைபேசி அழைப்பொன்றை எடுத்தார். "நீங்கள் சமிந்த விஜேசிறி எம்.பியா" எனக் கேட்டுவிட்டு "பண்டோரா பேப்பர்ஸ் விவகாரம் தொடர்பில் உங்கள் உரை நன்றாக இருந்தது, எதிர்காலத்தில் சந்திப்போம்" என்று கூறிவிட்டு தொலைபேசி அழைப்பை துண்டித்தார்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.


நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனக்கு ஏதாவது உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்பதை அந்த உரையாடலின்போது நான் உணர்ந்தேன். இது தொடர்பில் மிரிஹானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தேன். ஆனால், இன்றுவரை விசாரணை எதுவும் என்னிடம் மேற்கொள்ளப்படவில்லை.

ஒக்ரோபர் 14ஆம்திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதமரின் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான செயலாளருமான உதித் லொக்குபண்டார எனக்கு அழைப்பை மேற்கொண்டு, நடேசன் கதைத்தாரா? என வினவினார்.

நடேசன் என்ற பெயரில் ஒருவர் கதைத்தார் என்றும்- ஆனால், அது எவர் என்று தன்னால் அடையாளப்படுத்த முடியாததால் அது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன் என்றும் தெரிவித்தேன். அதற்கு பதில் வழங்கிய பிரதமரின் செயலாளர், அன்று தொலைபேசி அழைப்பை நடேசன்தான் மேற்கொண்டார் என்று எனக்குக் கூறினார். இது தொடர்பாகப் பொலிஸார் உடனடி விசாரணைகளை நடத்தாமை தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (எ-இ)

# எரிசக்தி திட்டத்துக்கு சீன நிறுவனம் முதலீடு



இலங்கையில் 400 மெகா வோட்ஸ் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்றிட்டங்களுக்கு 800 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடுசெய்ய சீன தேசிய எரிசக்திப் பொறியியல் மற்றும் கட்டுமான கம்பனி லிமிட்டெட் முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# விலை அதிகரிப்புக்கு விநோத எதிர்ப்பு

கிளிநொச்சி, ஒக்.22

கரைச்சி பிரதேச சபை அமர்வில் கலந்துகொண்ட சபை உறுப்பினர் சண்முகராஜா ஜீவராஜா அத்தியாவசிய விலை அதிகரிப்பைக் கண்டித்து அத்தியாவசியப் பொருள்களுடன் அமர்வுக்கு வந்திருந்தார்.

சிமெந்து, பால்மா, மா, மஞ்சள், சமையல் எரிவாயு சிலிண்டர்களை உடலில் சுமந்தும், கழுத்தில் தூக்கு கயிறை அணிந்து வந்தும், தனது எதிர்ப்பை அவர் நேற்று வெளியிட்டார். மக்களை பெரும் சுமைக்குள் அரசு தள்ளியுள்ளது என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார். (எ-113)



அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு முன்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். விலைகளைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி எரிவாயு கொள்கலன்களுக்கு மேல் ஏறி நின்று அவர்கள் போராட்டம் நடத்தினர். (எ-இ)

# 'பெகாஸ்' செயலி சி.ஐ.டியிடம்? விசாரணை கோரும் சம்பிக்க!

**கொழும்பு, ஒக்.22**

**வட்ஸ் அப் உரையாடல்களை ஒட்டுக்கேட்கும் பெகாஸ் செயலியை இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பயன்படுத்துகின்றதா? குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், தொலைபேசி நிறுவன உரிமையாளர்களை நாடாளுமன்றத்துக்கு வரவழைத்து இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நான் பெருநகர அமைச்சராக இருந்தபோது 150 மில்லியன் ரூபாவை முறையற்றவிதமாக தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தினேன் என்று அரச ஊடகங்கள் வழியாக பெருமெடுப்பிலான பரப்புரை செய்யப்பட்டது. எனினும், விசாரணைக்கு அழைத்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 75 மில்லியன் ரூபா தொடர்பாகவே வினவினர்.

என்னிடம் அங்கு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அமைய, 2018- 2019ஆம் ஆண்டுகளில் என்னுடைய தொலைபேசி உரையாடல்களை அவர்கள் செவிமடுத்திருந்தனர் என்பது எனக்குப் புரிந்தது. குற்றவியல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இப்படியான தொலைபேசி உரையாடல்களை செவிமடுப்பதற்கான அனுமதியை நீதிமன்றத்தில் பெறவேண்டும். என்னுடைய தொலைபேசி உரையாடலை செவிமடுக்க நீதிமன்ற அனுமதி பெற்றீர்களா? எனக்கேட்டேன். அப்போது குற்றவியல் திணைக்களத்தின் பிரசாத் ரணசிங்க என்பவர் தனக்கு வழங்கப்பட்ட பணி என்று தெரிவித்தார்.

இது நீதிவானின் அனுமதியின்றி செயற்படுத்தப்பட்டது. குற்றவியல் திணைக்களத்தால் எனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

நீதிமன்ற கட்டளையில்லாமல் எமது தொலைபேசி உரையாடல்களை தொலைபேசி நிறுவனங்கள் வழங்கியமை காரணமாக, தொலைபேசி நிறுவனங்களும் எனது உரிமையை மீறியுள்ளன. குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், தொலைபேசிநிறுவனஉரிமையாளர்களை நாடாளுமன்றத்துக்கு வரவழைத்து, இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றை அவர்கள் இழைத்துள்ளனர். இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் அறிக்கை பெறப்பட்டு, அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

நான் வட்ஸ் அப் உரையாடல்களையே செய்தேன். எமக்குத் தெரிந்த தொழில்நுட்ப அறிவின்படி, இந்த வட்ஸ்அப் உரையாடல்கள் தரவுகளாகவே பரிமாறப்படும். சாதாரணமாக அதை ஒட்டுக்கேட்க முடியாது. ஆனால் , அண்மையில் இஸ்ரேலின் பெகாஸ் செயலி மூலம் இந்தியாவின் ராகுல் காந்தி உள்ளிட்டவர்களின் தொலைபேசி வட்ஸ்அப் உரையாடல் செவிமடுக்கப்பட்டிருந்தது. இஸ்ரேலின் அந்த பெகாஸ் செயலி இலங்கை குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திடம் உள்ளதா?- என்றார். (எ-இ)

## அமெரிக்கத் தூதுவர் – பீரிஸ் பிரியாவிடை நிமித்தம் சந்திப்பு

கொழும்பு, ஒக். 22

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை, அமெரிக்கத் தூதுவர் அலைனா பி.டெப்லிட்ஸ் வெளிவிவகார அமைச்சில் வைத்துச் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸும் அமெரிக்கத் தூதுவர் டெப்லிஸ்ட்டும் எதிர்காலத்தில் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் சம்பந்தமாக குறிப்பாக சர்வதேச வர்த்தகம், முதலீடு மற்றும் ஒத்துழைப்பு சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினர். (ம)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாவால் ஒருவர் சாவு!

முல்லைத்தீவு, ஒக்.22

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 82 வயதுடைய வயோதிபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். வயோதிபர் நோய்த் தொற்றுக்கு உள்ளான நிலையில் கடந்த 17ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோன்ாத் தொற்றால் இதுவரை 46 பேர் உயிரிழந்துள்ளனர். (ஐ-19)

# பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்த வடக்கு ஆளுநர்!

கொழும்பு, ஒக்.22

வடக்கு மாகாண ஆளுநராகப் பதவியேற்றுள்ள ஜீவன் தியாகராஜா முப்படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து வடக்கு மாகாணத்தின் தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக் காலை சென்ற ஆளுநர் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாண மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிகக்கார, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே, யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், கடற்படை, விமானப் படை, இராணுவ அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். (எ-26)






**உதவி செய்யிறமெண்ட போர்வையில உழைக்கிறவை பற்றி நேற்றுச் சொன்னமெல்லோ. இண்டைக்கும் கிட்டத்தட்ட அதின்ர ரண்டாம்பாகம் தான். இண்டைக்கு உதவி செய்யிறதாச் சொல்லிக் கொண்டு 'வேற வகையில இலாபம் பாக்கிறவையைப் பற்றிச் சொல்லோணும்.**

**முதல்முறை கொரோனா வந்த புதிசில உண்மையான லொக்டவுன் போடுப்பட்டதெல்லோ. அந்த லொக் டவுன் காலத்தில கனசனம் வேலைக்கு போக முடியாததாலயும், எலெக்சன் வரப் போறதெண்டதாலையும் நீ முந்தி , நான் முந்தி எண்டு கனபேர் உதவி செய்யிறம் எண்டு களத்தில இறங்கிச்சினம். அப்பிடி ஒருத்தர் 'ஆக்களுக்கு உதவி செய்யப்போறம். அப்பிடி உதவி தேவைப்படுற ஆக்களின்ர லிஸ்டை தாங்கோ' எண்டு ஜீ.எஸ் மாரிட்ட போய் பட்டியல்களை வாங்கி இருக்கிறார். அதைவிட தன்ர போன்நம்பரைப் போட்டு, உதவி தேவையானவை இந்த நம்பருக்கு கோல் பண்ணுங்கோ எண்டு மீடியாக்களில நியூஸூம் போடுவிச்சார். அதைப் பார்த்திட்டு கனபேர் அவரிட்ட போன் பண்ணி உதவி கேட்டிருக்கினம். ஆனா அவர்' "கட்டாயம் உங்களுக்கு உதவி செய்யிறன். இப்ப முதல் கட்டமாய் கொஞ்சப் பேருக்குத்தான் குடுக்கலாம்" எண்டு சொல்லி ஒருமாதிரி கனபேரைக் காய்வெட்டிப் போட்டார்.**

**பிறகு தனக்கு போன் எடுத்தவையில பொம்பிளையளின்ர நம்பருகளுக்கு திரும்ப கோல் பண்ணி, அவைக்கு உதவிப் பொருள் தாறதுக்கு எங்க வரோணும் எண்டு வலியக் கேட்டு, அவையின்ர வீடுகளுக்கு நேரில போய் உதவிப் பொருளுகளைக் குடுத்திட்டு வந்திருக்கிறார். அதுக்குப் பிறகு அந்த நம்பர்களுக்கு இரவிரவாய் போன் பண்றது, அவையோட தேவையில்லாம வழிஞ்சு கதைக்கிறது எண்டு ஒரே ஆய்க்கினையாம். அதால உதவி வாங்கினவை எல்லாம் அவரின்ர நம்பரை அடுத்தடுத்த கிழமையளில ப்ளொக் செய்து போட்டினம். அதால எங்கட மகளிர் மட்டும் வள்ளலுக்கு கடுப்பு .**

**எளியதுகள். வாங்கும் மட்டும் வாங்கிப் போட்டு, இப்ப என்ர நம்பரையே புளொக் பண்ணுகினம். இதால தான் தமிழன் முன்னேறாமல் இருக்கிறான் எண்டு இலங்கைத் தமிழர்கள் முன்னேறாமைக்கான காரணத்தைக் கண்டுபிடிச்சு பொருமினார். அடுத்த லொக்டவுனுக்கும் அவர் உதவி செய்யப்போறதாக தன்ர நம்பரை பேஸ்புக்கில போட்டார். ஆனால் ஆளின்ர குணம் தெரிஞ்சதால ஒருத்தரும் ஏனெண்டும் எட்டிப் பாக்கேலையாம்.**


**இப்பிடி உதவி செய்யிறமெண்டிட்டு உபத்திரம் செய்யிற ஜென்மங்களும் இருக்கதான் செய்யுதுகள். அதைவிட உதவி செய்து உல்லாசமாக வாழுறதுகளும் இருக்குதுகள். அப்பிடி உல்லாசமா இருக்கிறவையைப் பற்றி நாளைக்குச் சொல்லுறம்....!**



- பட்சி

## மக்கள் சேவகனாக செயற்பட்ட திறமையாளன் கேதீஸ்வரதாசன்!

*மறைவுக்கு சரவணபவன் இரங்கல்*



யாழ்ப்பாணம், ஒக். 22
கட்சி ரீதியாகக் கட்டுப்பட்டு பல செயற்றிட்டங்களைப் பெற்றுக் கொண்டாலும், அவற்றை மக்களுக்காக கட்சிபேதமின்றி செயலாற்றும் உன்னதமான செயல் வீரர், தவிசாளர் கேதீஸ்வரதாசன். அவரின் இறப்பு தமிழ் மக்களுக்கு பேரிழப்பே!
இவ்வாறு இரங்கல் தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதியின் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.
காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் நேற்றுக்காலமானார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிய இரங்கல் செய்திக் குறிப்பில்,
காரைநகரில் ஏழு கிராம அலுவலர் பிரிவுகள் காணப்பட்டபோதும், எந்தவிதபாகுபாடுமின்றி வேலைத் திட்டங்களையும் உதவித் திட்டங்களையும் வழங்கியவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டங்களுக்கும், அதற்கான ஏற்பாடுகளிலும் முக்கிய பங்கு வகித்தவர். தான் என்ற அகங்காரமின்றி, பிரதேச சபையை திறம்பட இயக்கியவர். அவரைப் பார்த்து காரைநகருக்கு அருகிலுள்ள சபைகளின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள்கூட பார்த்தும், கேட்டும் கற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்பட்ட முன்னுதாரணமானவர். தமிழ்த் தேசியப் பற்றாளர். அத்தகையவரின் இழப்பு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு. - என்று தெரிவித்துள்ளார்.
(கு)

# சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராக கூட்டமைப்பு போர்



மட்டக்களப்பு, ஒக். 22
மட்டக்களப்பு மாவட்டம், வாகரை பிரதேச செயலக பிரிவில் உள்ள காரமுனைப் பகுதியில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் தலைமையில், வெளிமாவட்ட சிங்கள மக்களைத் திட்டமிட்டு மிகவும் இரகசியமான முறையில் குடியேற்ற எடுத்த முயற்சியை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.
வெளி மாவட்ட சிங்கள குடுப்பங்களைச் சேர்ந்த சுமார் 200 பேருக்குக் காணி வழங்குவதற்காக நேற்றுக் காலை புனானை வனவிலங்கு திணைக்களக் கட்டடத்தில் பதிவு மேற்கொள்ளப்பட்டது.
இதன்போது அங்குசென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சி.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான மா.நடராசா, இ.பிரசன்னா, மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன், மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் அணி, மகளிர் அணி உறுப்பினர்கள் உட்படப் பலரும் இணைந்து குறித்த காணி வழங்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.
புனானையில் காணி தொடர்பாக தகவல் பதிவுசெய்யப்பட்ட மக்களை அழைத்துக்கொண்டு காரமுனைக்கு தங்களது இடங்களைக் காண்பிக்கச் சென்றபோது ஆணையாளருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நடைபெற்ற கருத்து முரண்பாடு ஆர்ப்பாட்டமாக மாறியது.
இதன்போது அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை உடன் நிறுத்தக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது ஆணையாளர் குறித்த இடத்தில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் தப்பிச் சென்றார். (கு-22)

## தொற்று 554 சாவு 19

கொழும்பு, ஒக். 22
இலங்கையில் நேற்று 554 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 33 ஆயிரத்து 860 ஆக எகிறியுள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 8 ஆயிரத்து 790 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 2 ஆயிரத்து 464 ஆக அதிகரித்துள்ளது.
இதேவேளை, இலங்கையில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (கு-22)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
இன்று முதல்
திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்ஷனின்
தீபாவளி விசேட தள்ளுபடி

அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும்
சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாகவும்
இந்தியன் செலக்ஷனின் தீபாவளி மலிவுவிற்பனை
நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு
வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்து கொள்கின்றோம்.
பட்டுச்சாறிகள் கொட்டன் சாறிகள், சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள் சிறுவர்,
சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள் மற்றும்
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைத் தெரிவுகள்
இம்முறை தீபாவளியை இந்தியன் செலக்ஷனுடன்
கொண்டாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : 22.10.2021 - 07.11.2021 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

# எரிபொருள் நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ளலாம்

## தொழிற்சங்கங்கள் தகவல்



**கொழும்பு, ஒக்.22**

**சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் மசகு எண்ணெய் நவம்பர் 11ஆம் திகதி வரை மட்டுமே போதுமானதாக உள்ளது. அடுத்த கட்ட மசகு எண்ணெய்த் தொகுதி டிசெம்பர் மாதம் 14ஆம் திகதியே வரவுள்ளது. ஏறத்தாழ ஒரு மாத காலத்துக்கு இலங்கைக்கு மசகு எண்ணெய் கிடைக்காத நிலைமையே உள்ளது.**

இவ்வாறு கைத்தொழில் முற்போக்கு ஊழியர் சங்கத்தின் தலைவர் பந்துல சமன்குமார தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மசகு எண்ணெய்போதியளவுஇல்லாத காரணத்தால் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்திப் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்பட்ட எண்ணெய்க் கப்பல் உரிய நேரத்துக்கு வராதமையால் கொலன்னாவையில்களஞ்சியப்படுத்தப்பட்ட பெற்றோல், டீசல் முடிவடையும் நிலையில் உள்ளன. தற்போது முத்துராஜவெல . களஞ்சியசாலையில் பெற்றோல் மட்டுமே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. மசகு எண்ணெயின் அளவு குறைந்துள்ளது என்று பெற்றோலிய பொதுச் சேவைகள் சங்கத்தின் தலைவர் அசோக ரன்பல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் அபேசிங்க, மசகு எண்ணெய்க் கப்பலொன்று வந்துள்ளதால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும்நிலைமை இல்லை என்று தெரிவித்துள்ளார். ஆயினும், ஐ.ஓ.சி எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் போதியளவு இருக்கும் என்று அந்தத் தொழிற்சங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)





# ஒரே பிரசவத்தில் ஆறு குழந்தைகள்

கொழும்பு, ஒக்.22

இலங்கையில் 31 வயதுப் பெண் ஒருவர் ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகளைப் பிரசவித்துள்ளார். ஒரு பிரசவத்தில் ஆறு குழந்தைகள் பிறந்துள்ளமை இலங்கையில் இதுவே முதல் முறையாகும்.

கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் பிரசவம் நடந்துள்ளது. நேற்று அதிகாலை 12.16 க்கும் 12.18 க்கும் இடைப்பட்ட கால இடைவெளியில் சத்திரசிகிச்சை மூலம் 31 வயதுப் பெண் ஒருவர் ஆறு குழந்தைகளைப் பிரசவித்தார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தாயும், சிசுக்களும் தற்போது சிறந்த ஆரோக்கியத்துடன் உள்ளனர் என்று அந்த மருத்துவமனையின் மகப்பேறு மருத்துவர் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் திரான் டயஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)



பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கஜன் மற்றும் சுலக்சனின் 5 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. (ஐ-125)

# எல்லவெல நீர்வீழ்ச்சியில் மூழ்கி தந்தை, மகன், மகள் உயிரிழப்பு




கொழும்பு, ஒக்.22

வெள்ளவாய, எல்லவெல நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுடைய தந்தை, 15 வயதுடைய மகன், 11 வயதுடைய மகள் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் அனைவரும், காத்தான்குடியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் காத்தான்குடியிலிருந்து கொழும்பு மருத்துவமனைக்கு உறவினரொருவரைப் பார்க்கச் சென்று, திரும்பும் வழியில், மேற்படி நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்றுள்ளனர். அப்போது ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பிரதேசவாசிகள் உடனடியாகச் செயற்பட்டு கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் அவர்களை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும், அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. உயிரிழந்தவர்களின் உடல்கள் வெள்ளவாய அரசினர் மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

தற்போது எல்லவெல நீர்வீழ்ச்சியில் நீர் மட்டம் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது என்றும், பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# குடிவரவு குடியகல்வு திணைக்கள அலுவலகத்தில் சுகாதார நடைமுறைகள் குறித்து திடீர் சோதனை

வவுனியா, ஒக். 22

வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வு திணைக்கள அலுவலகத்தில் சுகாதார நடைமுறைகள் குறித்து சுகாதாரப் பிரிவினர் நேற்று திடீர் கண்காணிப்பை மேற்கொண்டனர்.

வவுனியா, உள்வட்ட வீதியில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வு திணைக் களத்தில் அதிகளவிலான மக்கள் நிற்பதாக வும், சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடை முறைகள் பின்பற்றப்பட வில்லை எனவும் சுகாதாரப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா சுகாதாரப் பிரிவினர் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா அலுவலகத்தில் திடீர் கண்காணிப்பை முன்னெடுத்திருந்தனர். இதன்போது அதிகளவிலான மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது நின்றதையடுத்து, குறித்த அலுவலக அதிகாரிகளுக்கு கொரோனா அச்சுறுத்தல் தொடர்பில் தெளிவு படுத்தியதுடன், அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (ம-18)

# நாடாளுமன்றத்துக்கு சென்ற கோத்தாபய!

கொழும்பு, ஒக்.22

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று நாடாளுமன்றத்துக்குச் சென்றுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குச் சென்ற ஜனாதிபதியை, அவைத் தலைவர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், நாலக்க கொடஹேவா, கஞ்சன விஜேசேகர, அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான இசுரு தொடங்கொட ஆகியோர் வரவேற்றனர்.

ஜனாதிபதி அவைக்குப் பிரவேசிக்கும் போது, நிலையியற் கட்டளை 27/2இன் கீழ், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவரின் வாய்மூல கேள்விகளுக்கு, அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் லசந்த அழகியவன்ன ஆகியோர் அளித்த பதில்களை, ஜனாதிபதி செவிமடுத்தார். (எ-இ)



# அரசை வீழ்த்தும் எண்ணம் சுதந்திரக் கட்சிக்கு இல்லை

## சிறிபால டி சில்வா தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 22**

**அரசாங்கம் சரியான திசையில் பயணிக்கவேண்டும். அரசுக்குள் எடுக்கப்படும் தீர்மானங்கள் சரியானதாக முன்னெடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கத்தில் அரசை சரியாக வழிநடத்தும் முயற்சிகளையே சுதந்திரக் கட்சி முன்னெடுக்கின்றதேதவிர அரசை வீழ்த்தும் நோக்கம் எமக்கு ஒருபோதும் இல்லை.**

என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுக்குள் முரண்பாடுகள் இருப்பதை மறுப்பதற்கு இல்லை. பல்வேறு காரணிகளில் அரசில் அங்கம் வகிக்கும் பல தரப்பினர் முரண்படுகின்றனர். கருத்துக்களை முன்வைக்கின்றனர், விமர்சிக்கின்றனர். ஆனால், இவை ஜனநாயகச் செயற்பாடுகள் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும்வேளையில் பல்வேறு தரப்பினர் தத்தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும். அப்போதுதான் சரியான தீர்மானங்களை முன்னெடுக்கமுடியும்.

சுதந்திரக் கட்சி எப்போதுமே நாட்டுக்கும் மக்களுக்கும் சரியான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் கட்சியாகும். இப்போது நாம் பல மிழங்கு பங்காளிக்கட்சியாக மாற்றம் பெற்றிருந்தாலும்கூட எமது கொள்கை, வேலைத்திட்டம், மக்கள் நலச் சிந்தனையில் சிறிதும் நாம் பின்வாங்கவில்லை.

அரசுக்கு உந்து சக்தியாக நாம் உள்ளோமே தவிர அரசை வீழ்த்தும் எந்தவித நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுக்கவில்லை.

எப்போதும் அரசை சரியான பாதையில் வழிநடத்தவே நாம் நினைக்கின்றோம். அரசு தவறான பாதையில் பயணித்தால் சரியான திசைக்கு கொண்டு செல்வது சுதந்திரக் கட்சியின் கடமையாகும். அந்தக் கடமையை நாம் செய்யாது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால் இறுதியாக சகலரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் -என்றார். (ம)

## சனசமூக நிலையங்களுக்கான மானியத் தொகை வழங்கி வைப்பு

சாவகச்சேரி,ஒக்.22

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாக இயங்கும் சனசமூக நிலையங்களுக்கான இந்த வருடத்துக்கான மானியத் தொகை பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணியகத்தால் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் பரிந்துரைகளுக்கு அமைய சிறப்பாக செயற்படும் சனசமூக நிலையங்களுக்கு மானியக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா வழங்குமாறு அறிவிக்கப்பட்டது.

இதன்படி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பாக இயங்கும் 24 சனசமூக நிலையங்களுக்கு அரச மானியஉதவித் தொகையுடன் சபையின் ஒதுக்கீட்டிலிருந்து தலா 10 ஆயிரம் ரூபாவும் சேர்த்து 20 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (ஜ-9)




## சிறுகைத்தொழில் மேற்கொள்ள புலம்பெயர் உறவுகளால் உதவி

கிளிநொச்சி, ஒக்.22

கிளிநொச்சி, கல்லாறுப் பகுதியில் வசிக்கும் கணவரால் கைவிடப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் சிறுகைத்தொழிலாக மிக்சர் நிறுவனத்தை தொடக்குவதற்கான ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

நிக்சன் அறக்கட்டளையின் அனுசரணையில் புலம்பெயர் உறவுகள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியில் இந்த சிறுகைத்தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது. அறக்கட்டளையின் இணைப்பாளரும் புளொட் அமைப்பின் முல்லைத்தீவு இணைப்பாளருமான ஞா.யூட்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் கிராம மாதர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-19)

## புத்துவெட்டுவான் கிராமத்தில் யானைகள் அட்டகாசம்



முல்லைத்தீவு,ஒக்.22

முல்லைத்தீவு, புத்துவெட்டுவான் கிராமத்தில் அதிகரித்துள்ள யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கிராமத்துக்குள் வரும் யானைகள் பயன்தரு மரங்களை அழித்து வருவதுடன், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளையும் அச்சுறுத்தி வருகின்றன. கடந்த 17 ஆம் திகதி புத்துவெட்டுவான் கிராமத்துக்குள் நுழைந்த யானைகள் வ.சரோஜினிதேவி என்பவரின் 24 தென்னைகளை முற்றாக அழித்துள்ளன. அடிக்கடி யானைகளால் ஏற்படுத்தப்படும் பயிர் அழிவுகள் தொடர்பாக கிராம அலுவலர் மூலம் பிரதேசசெயலகத்துக்கு ஏது தகவல்கள் வழங்கப்பட்டாலும் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. -என்றனர். (ஜ-13)

## முல்லைத்தீவு நகருக்குள் அதிகமான பஸ்கள் வர நடவடிக்கை எடுக்கவும்

முல்லைத்தீவு,ஒக்.22

முல்லைத்தீவு நகருக்குள் கூடுதலான பஸ்கள் வருகை தருவதன்மூலம் பொதுமக்கள் சந்தையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் திருமதி இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பத்தாண்டுகளில் முல்லைத்தீவு நகருக்குள் பஸ்கள் வருகை தருவதில் ஒழுங்கின்மை காணப்படுகின்றது. பஸ்கள் வருகை தராத நாள்களே கூடுதலாக உள்ளன. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் பஸ்கள் தரித்து நின்றன. பொதுமக்கள் சந்தை உட்பட பல்வேறு தேவைகளை நிறைவு செய்த பின்னர் பஸ்களில் ஏறி பயணித்தனர். ஆனால் நகர அபிவிருத்தி ஏற்படுகின்றபோது தற்போது மாவட்டச்செயலகத்துக்கு அருகில் புதிய பஸ் நிலையம் அமைந்துள்ளது.

நகர மத்திக்குள் மக்கள் செல்வதற்கு 300 மீற்றருக்கும் அதிகமான மீற்றர்தூரம் நடந்துசெல்ல வேண்டும். உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் சந்தைக்கு கொண்டு வருவதில் கூட பொதுமக்களுக்கு இடையூறுகள் உள்ளன.

மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள் முல்லைத்தீவு நகரத்துக்குள் வருகை தந்தாலே மக்களின் பிரச்சினை கூடுதலாக தீரும். முல்லைத்தீவு பொதுச்சந்தை மக்கள் குறைவாகக் காணப்படுவதற்கு போக்குவரத்து நெருக்கடியே முதன்மைக் காரணமாகவுள்ளது -என்றார். (ஜ-13)

## கொவிட் தடுப்பூசி போடும் நிலையம் சாவ.இந்துக் கல்லூரிக்கு மாற்றம்

சாவகச்சேரி,ஒக்.22

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் இன்று ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் மற்றும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களை இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வருகை தருமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டபோது ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தடுப்பூசி ஏற்றிக் கொண்டனர். (ஜ-9)

## சட்டத்தின் அபிமானத்தை காப்பதே அரசின் கடமை!

### தலதா அத்துக்கோரள எம்.பி. தெரிவிப்பு



சட்டத்தின், நீதியின் அபிமானத்தை காப்பாற்றுவது அனைத்து அரசுகளினதும் கடமை என்று நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

11 தமிழ் இளைஞர்கள் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் குற்றப்பத்திரம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் அரசியல் ரீதியாக முடிவெடுக்க வேண்டாம். எவர் தவறு செய்தாலும், அது தவறுதான். காணாமல் ஆக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரின் மனநிலையை புரிந்து கொள்ள வேண்டும் -என்றார். (எ-இ)

## வெள்ளம் வரப்போகிறது அணைகட்டத் தயாரா?

வடகீழ்ப் பருவமழை தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வங்கக் கடலில் ஐந்துக்கும் மேற்பட்ட தாழமுக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன என்றும், ஆறு சுற்றுக்களாக வடமாகாணத்துக்கு மழை கிடைக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதேநேரம் குறுகிய காலத்துக்குள் செறிவான மழை கிடைப்பதால் வெள்ள இடர் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.


ஒவ்வொரு மழைக்காலத்திலும் வடமாகாணத்தின் பல்வேறு இடங்களில் வெள்ள இடர் ஏற்படுவது இயல்பான ஒன்றாகவே ஆகிவிட்டது. கடந்த மழைக்காலத்தில் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதி வெள்ளத்தால் மூழ்கும் நிலையில் இருந்தது. யாழ்ப்பாணம் மாநகர முதல்வராக வி.மணிவண்ணன் பொறுப்பேற்ற பின்னர் பல கால்வாய்கள் துரிதகதியில் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 3 தசாப்தங்களின் பின்னர் அந்தக் கால்வாய்கள் மறுசீரமைக்கப்பட்டன. இதனால் இனிவரும் காலங்களில் வெள்ள இடர் யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் ஏற்படாத நிலைமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தவிர இந்தமுறை வடக்கில் பல்வேறு பகுதிகளிலும்கூட பல்வேறு கால்வாய்கள் துப்புரவு செய்யப்பட்டும் புதிதாகக் கட்டப்பட்டும் உள்ளன. ஆதலால், இந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கு வடக்கு கிட்டத்தட்ட தயார் நிலையில் உள்ளது என்றே கருத வேண்டும்.

அதேநேரம் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்பில் கூடுதல் கரிசனை கொள்ளவேண்டிய விடயம் இது. வெள்ளம் என்பது வடக்குக்குப் புதிதல்ல. ஆனால், வெள்ளத்தின் கனதியை உணர்ந்து தாழ்நிலப் பகுதி மக்களை உரியவாறு வெளியேற்றி இடைத்தங்கல் முகாம்களில் அமர்த்தி – நிவாரணங்களை சீரான முறையில் வழங்கிய பதிவுகள் எவையும் இதற்கு முன்னர் இல்லை. இந்த மெத்தனப்போக்கு இதே வருடமும் தொடரக் கூடாது.

வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள் என்று கருதப்படும் இடங்களை அடையாளப்படுத்தி அந்தப் பகுதி மக்களை இந்த இடரில் இருந்து காப்பாற்றக் கூடிய அத்தனை வழிகளையும் உரிய அதிகாரிகள் இப்போதே தேர்ந்தெடுக்க வேண்டும். அரைகுறை நிர்மாணப் பணியிலுள்ள கால்வாய் கட்டுமானங்கள் நிறைவு செய்யப்படுவதை துறைசார் அதிகாரிகள் உறுதிப்படுத்தவேண்டும். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதைபோன்று கால்வாய்களை புதிதாக அமைக்கப்போய் அந்தக் கட்டுமானங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டு, இருந்ததையும் இழந்த கதையாக ஆகவிடக்கூடாது.

வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்த பின்னர் வெளிக்காட்டப்படும் அக்கறையால் எந்தப் பயனும் இல்லை. அவை வெறும் பகட்டு நடவடிக்கைகள் என்பதையும் தேர்தலையும் வாக்குகளையும் இலக்குவைத்து அரங்கேற்றப்படும் நாடகங்கள் என்பதையும் மக்கள் மிக நன்றாகவே அறிவார்கள். வெள்ளம் சூழ்ந்த பின்னர் வழங்கப்படும் பாணையும் பருப்பையும் அவர்கள் உங்களிடம் எதிர்பார்க்கவில்லை. அதை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். அவர்களின்இயலுமைக்குஉட்பட்ட விடயம் இது. அதிகாரிகளாகிய – அரசியல்வாதிகளாகிய நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் வெள்ள முகாமைத்துவம் ஒன்றை கனகச்சிதமான முன்னேற்பாட்டுடன் செய்து முடிப்பதே.




## குற்றவியல் நடைமுறைக்கோவை திருத்தம் ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கும்

### எச்சரிக்கிறார் சுரேஷ்



**கொழும்பு, ஒக். 22**

**தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தச் சட்டவரைவு நாட்டு மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதுடன் ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்குவதாகவும் அமையும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நாட்டில் தற்போது அமுலிலுள்ள குற்றவியல் நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதன் பிரகாரம், ஒருவர் கைது செய்யப்பட்டால் நாற்பத்தெட்டு மணிநேரம் வரையில் அவரை நீதிவான் நீதிமன்றத்திலோ அல்லது மேல்நீதிமன்றத்திலோ முன்னிலைப்படுத்தாமல் இருப்பதற்கு இந்தத் திருத்தம் வழிவகை செய்கின்றது.

இதில் முக்கியமாக பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது 1978ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாகக் கொண்டுவரப்பட்டு, இன்றுவரை 43 வருடங்களாக அமுலில் இருக்கின்றது. ஏற்கனவே, இது இலங்கை மக்களுக்கான அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் மறுத்து, பதினெட்டு மாதங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அதிகாரத்தை வழங்குகிறது.

இந்த நிலையில்தான், குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்தத் திருத்தங்களும் நாட்டின் குடிமக்களுக்கான ஜனநாயக உரிமைகளை மறுதலிப்பதுடன், கைது செய்யப்பட்டால் அவர் உடன் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படை உரிமையையும் மறுதலிக்கின்றது. ஒரு சந்தேக நபரை நாற்பத்தெட்டு மணிநேரம் காவலில் வைத்திருப்பது என்பது அவரை சித்திரவதை செய்யவும் தமது விருப்பத்திற்கேற்ப வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளவும் இந்தக் கால அவகாசங்கள் உதவும் என்றே நாம் நம்புகின்றோம். பொலிஸார் தமது தேவை கருதியோ அல்லது தனிப்பட்ட முறையில் தமது நண்பர்களுக்கு உதவும் வகையிலோ இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவழிவகை செய்கிறது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கொண்டுவரப்பட்ட அனைத்து விடயங்களுமே சட்டரீதியாக எதேச்சாதிகாரத்தை நோக்கி இந்த நாட்டைக் கொண்டுசெல்வதற்கே வழிவகுத்துவருகின்றன- என்றுள்ளது. (ம)

## கொரோனாவைத் தடுக்க 2.5 மில். டொலர் நிதி


கொழும்பு, ஒக்.22

அவசர கொரோனாத் தடுப்பு உதவியாக 2.5 மில்லியன் டொலர் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் ஊடாக வழங்கப்படவுள்ளது என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் செயற்பணி இயக்குநர் ரீட் ஈஷ்லிமேன், இந்த மேலதிக நன்கொடை சுகாதார அமைப்புக்களை வலுப்படுத்தும், சுகாதாரப் பணியாளர்களுக்கு உதவி செய்யும் மற்றும் தடுப்பூசியேற்றலுக்கான அணுகலை மேம்படுத்தும் என்று தெரிவித்தார்.

இந்த நிதி இலங்கையில் ஒட்சிசன் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்தவும், சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களில் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தனிநபர் பாதுகாப்பு உபகரணத் தொகுதியை வழங்கவும், சுகாதாரப் பணியாளர்களின் தாங்குதிறனை வலுப்படுத்தவும் உதவும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# சுன்னாகம் தபால் நிலையம்






# அரைகுறை கட்டடத்தினுள்ளே பதுங்கியிருக்கும் ஊழல்

■ மிஸ்டர் கழுகு

நல்லாட்சி அரசின் காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டது. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பதுபோல அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இன்றும் அவை பெயர் சொல்லும் கட்டடங்களாக எழுந்து நின்று மக்களுக்கு சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு ஊடாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் முன்மொழிவுக்கு அமைவாக, சுன்னாகம் தபால் நிலையம் மற்றும் தபால் அதிபர் தங்குமிடம் அமைக்க 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. திட்டம் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இன்று வரையில் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படவுமில்லை. மக்கள் அதன் ஊடாகச் சேவை பெறவும் இல்லை.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் தவறான - குளறுபடியான நிர்வாக நடவடிக்கைகளால் அரசின் நிதி வீணடிக்கப்பட்டு இழப்புச் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு இவ்வாறான நடவடிக்கைகளும் காரணமாக அமைகின்றன. அதேவேளை கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பல திணைக்களங்கள் இராணுவமயமாகின. சிறப்பான - நேர்மையான - ஊழலற்ற - விரைவான நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கே அவ்வாறு மேற்கொள்வதாகச் சொல்லப்பட்டன. அரசின் அந்த நோக்கை தலைகீழாக்கும் வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர், திட்டமிடல் பணிப்பாளர், திட்டத்தைப் பொறுப்பேற்ற ஒப்பந்தகாரர் ஆகியோர் செயற்பட்டுள்ளனர்.

'உதயனின்' புலனாய்வுக் குழு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திடமிருந்து நீண்ட இழுபறியின் பின்னர் ஆவணங்களைப் பெற்றுக்கொண்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பல பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை 'உதயன்' புலனாய்வுக் குழு தனது புலனாய்வின்போது ஆதாரத்துடன் கண்டறிந்தது.


அத்துடன் மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர், தேசியக் கணக்காய்வு அலுவலகம் என்பனவற்றுக்கு பல தகவல்களை ஒளித்துள்ளமையையும் கண்டுபிடித்துள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட தகவல்களுக்கும், கணக்காய்வுக்கு சமர்ப்பித்த தகவல்களுக்கும் இடையிலேயே முரண்பாடுகள் காணப்படுகின்றன.

**உதயன் புலனாய்வுக் குழு கண்டறிந்த தகவல்கள் இங்கே முன்வைக்கப்படுகின்றன.**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக ஜூலை மாதம் 2ஆம் திகதி, மேற்படி திட்டம் தொடர்பான பல்வேறு விடயங்களைக் கோரி, விண்ணப்பம் அனுப்பப்பட்டது. தகவல் அலுவலரால் உரிய காலத்துக்குள் பதில் வழங்கப்படவில்லை. இதனால் மேன்முறையீடு ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி பதில் வழங்கப்பட்டது.

### இரு கோவைகள்

மேற்படி திட்டம் தொடர்பில் எத்தனை கோவைகள் கையாளப்படுகின்றன? அதன் ஆரம்பத் திகதி ? முடிவுறுத்திய திகதி? கோவைகளின் பக்க எண்ணிக்கை? கோவையைக் கையாண்ட அலுவலர்களின் விவரங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான பதிலில் மாவட்டச் செயலகம் இரண்டு கோவைகள் பேணப்படுவதாகத் தெரிவித்திருந்தது.



தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக தகவல் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம்

தங்களின் JF/GA/RTI/INFO/03-1/2021 இலக்க 2021.07.05 ந் திகதிய கடித விடயம் தொடர்பாக (புதிய இலக்கம் JF/GA/RTI/2021/07/0058) கீழ்க்குறிப்பிடப்படும் தகவல் முன்னளிக்கப்படுகின்றன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

1. அ. இரு கோவைகள்

| தொ. இல | கோவை இலக்கம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்திய திகதி | கோவை இதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | JF/DPS/MNIROL/POB/VI/02/2019 | 2019.07.22 | 2019.12.26 | 283 |
| 2 | JF/DPS/MNIROL/POB/VI/03/2020 | 2020.07.25 | முடிவுறுத்தப்படவில்லை | 10 |

ஆ. கோவைகளை கையாண்ட உத்தியோகத்தர்கள்

(i) திரு.இ.கிருஸ்ணராசன், உதவி திட்டமிடல் பணிப்பாளர்
(ii) திரு.கு.குகேந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர்
(iii) திரு.வை.விஜித், அபிவிருத்தி உத்தியோகத்தர்

2. (i). திட்டம் ஆரம்பித்த திகதி - 2019.07.29
(ii) ஒப்பந்தம் முடிவுறுத்தல் திகதி - 2019.12.10
(iii) காலநீடிப்பு விபரம் - 2019.12.30 வரை

3. நிதி ஒதுக்கீடு விபரம் - 2019 – 26.50 மில்லியன்
2020 – 18.54 மில்லியன்

4. ஒப்பந்த திட்ட பொறியியலாளரால் மாவட்ட செயலகத்திற்கும் மற்றும் ஒப்பந்தகாரருக்கு திட்டம் தொடர்பில் வழங்கப்பட்ட 05 கடிதப்பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன (இணைப்பு. 1)

முதலாவது கோவை JF/DPS/MNIROL/POB/VI/02/2019 என்றும் அது 22ஆம் திகதி ஜூலை மாதம் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி முடிவுறுத்தியதாகவும் 283 பக்கங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்திருந்தது.

**இரண்டாவது கோவை JF/DPS/MNIROL/POB/VI/02/2020 என்றும் அது 25ஆம் திகதி ஜூலை மாதம் 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை என்றும், 10 பக்கங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்திருந்தது.**

ஆனால், மாவட்டச் செயலகம் தெரிவித்ததைப் போன்று JF/DPS/MNIROL/POB/VI/02/2020 என்ற கோவை பேணப்படவில்லை. அவ்வாறானதோர் கோவை இல்லாமலேயே, அவ்வாறு ஓர் கோவை இருப்பதாக மாவட்டச் செயலகம் பதிலளித்துள்ளது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2019ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு ஆட்சியில் இருந்தது. அந்த அரசின் காலத்திலேயே தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு இருந்தது. அந்த அமைச்சின் ஒவ்வொரு விடயதானத்தினதும் ஆங்கிலச் சொல்லின் முதல் எழுத்துக்களின் குறியீடாகவே MNIROL என்ற சொல் கோவைகளில் பயன்படுத்தப்பட்டது. 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற பின்னர் மேற்படி அமைச்சு இல்லாமற் செய்யப்பட்டது. நீதிஅமைச்சின்கீழ் மேற்படி விடயதானங்கள் கொண்டு வரப்பட்டன. புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னரும் இல்லாத ஓர் அமைச்சின் பெயர் குறியீடு MNIROL இரண்டாவது கோவைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.


மண்டையில் இருந்த கொண்டையை மறந்ததைப் போன்று இல்லாத ஓர் கோவையை இருப்பதாகக் காண்பிக்க முயன்றவர்கள், அதன் பெயரை மாற்றாமல் விட்டுவிட்டனர்.

முதலாவது கோவையின் முடிவுறுத்தல் திகதி 26.12.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது கோவையின் ஆரம்பத் திகதி 25.07.2020 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அப்படியாயின் இந்த இடைப்பட்ட காலத்தில் எந்தவொரு நடவடிக்கைகளும் இடம்பெறவில்லையா என்ற கேள்வி எழுவது இயல்பானதே.**

இடைப்பட்ட காலத்திலும் கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. அதனை மற்றொரு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்ட ஆவணம் உறுதி செய்கின்றது.

மாவட்டச் செயலகம் வழங்கிய தகவலுக்கு அமைவாக இரண்டு கோவைகளினதும் குறிப்பிதழ்களை (minutes sheet) கோரியிருந்தோம். அதில் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக 31.12.2019ஆம் திகதி ஓர் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.



தவிக்கும் கேரளா

## ஒரு பக்கம் கனமழை: மறுபக்கம் கொரோனா

கேரளா, ஒக்.22 மழை வெள்ளத்தில் தத்தளிக்கும் கேரளாவில் ஒரே நாளில் புதிதாக 11 ஆயிரத்து 150 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கேரளாவில் குறைந்துவந்த கொரோனா தற்போது மீண்டும் உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே கேரளாவில் தொடர்ந்து பெய்த மழையால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதுவரை 42 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)


## 21ஆம் நாள் நினைவலைகள்



03-10-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

அமரர் திருமதி **இராசலட்சுமி தம்பிரத்தினம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்-யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்)

அவர்கள் சிவபதமடைந்த செய்தியறிந்து தொலைபேசி வாயிலாக இரங்கல் தெரிவித்தவர்களிற்கும் சமூக வலைத் தளங்கள் வாயிலாக இரங்கல்களை வெளிப்படுத்தியவர்களிற்கும் குறிப்பாக சங்கமம் குழுமத்தின் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்த உறவினர்களிற்கும் நேரடியாக வருகை தந்து இறுதிச்சடங்கில் கலந்து இரங்கலைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி வேண்டி நாளைய தினம் (23-10-2021) சனிக்கிழமை சுன்னாகம் பண்டிதர் மாணிக்கத் தியாகராயர் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மோட்ஷப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோஷன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

(இவ் அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : வாகினி: 0041788411196,
ஞானம்: 0041789681990
இரத்தினவேல் (தவராசா) : + 94 77 6191056

## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 02 . 1945



உதிர்வு 20 . 10 . 2021

**கனகரட்ணம் லோகேஸ்வரன்**
**(மாத்தையா)**

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும். உடுவில் கொட்டடி வளவு மற்றும் ஒஸ்லோ நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் லோகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (20.10.2021) புதன்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - கனகம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சிவசக்தி, சிவசங்கர், அமுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார், சுதர்சனன்,சசிகா ஆகியோரின் அன்பு மாமனும், இராஜரட்ணம், தேவமனோகரி, அற்புதராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் செல்வராணி, கணேசலிங்கம். விமலாதேவி, சோதிராணி, பஞ்சலிங்கம், காலஞ்சென்ற பரமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்சயன், திவானி, பிரியங்கா, சவீனா, தேனுகா, பிரகாஸ், ஆதிஷா, பிருத்திகா, ஆதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்


## இன்றைய நாள்

**மேடம்:** பரபரப்பாக செயற்பட்டு பாராட்டு பெற்று மகிழ்வீர்கள். உயர் பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்கள் அத்தியாவசிய பொருட்களை வாங்குவீர்கள்.

**இடபம்:** பணி, தொழிலில் முன்னேற்றம் நன்றாக இருக்கும். குடும்பத்தினருடன் இருந்து வந்த பிரச்சினைகள் அனைத்தும் குறையும். குழப்பங்களைப் புறந்தள்ளி விடுங்கள்.

**மிதுனம்:** புதிய விஷயத்தில் இறங்குவோருக்கு முன்னேற்றம் உண்டு. கலைத்துறையில் உள்ளோருக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். மன நிறைவு உண்டு.

**கடகம்:** சுபச்செலவுகள் உண்டாகும். நட்பு வட்டம் விரியும். உறவினர் ஒருவர் செய்யும் செயல் மகிழ்ச்சியை அளிக்கும். ஆடம்பர பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** ஒரேநாளில் முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டிவரும். உறவினர்கள் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும்.

**கன்னி:** குடும்பத்தில் இருந்த கோபம் யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் எல்லாம் இனிதே முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்:** தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் நன்மை செய்வார்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். அரசால் அனுகூலம் உண்டு.

**விருச்சிகம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். முக்கிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது. நன்றி மறந்த சிலரை நினைத்து வருந்துவீர்கள். கனிவாகப் பழகுங்கள்.

**மகரம்:** பழைய பிரச்சினைகளுக்கு எளிதாக தீர்வு காண்பீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புண்ணிய ஸ்த லங்கள் சென்று வருவீர்கள். வியாபா ரத்தில் திடீர் இலாபம் உண்டு.

**கும்பம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உறவினர் நண் பர்களால் நன்மை உண்டு. உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். பொருள்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை வரும். பெற்றோரின் ஆதரவு பெருகும். நம்பிக்கைக்குரிய வரை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். புது பொறுப்புக்களை ஏற்பீர்கள்.

## சுன்னாகம் தபால் நிலையம்


மேலும், குறிப்பிதழ்கள் 21.08.2019 தொடக்கம் 24.12.2020 வரை ஒரே தாளில் உள்ளமையால், இரண்டாவது கோவை உள்ளது என்று மாவட்டச் செயலகம் வழங்கிய தகவல் பொய்யானது என்பது அம்பலமாகின்றது.

உள்ளகக் கணக்காளரின் ஐயவினா 8 இல், 11.02.2020 அன்று கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அனுப்பிய கடிதத்தின் அவதானிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் அந்தக் கடிதம் கணக்காய்வுக் குழுவினரால் பார்வையிடப்பட்டிருக்கவேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வழங்கிய பதிலில், முதலாவது கோவையின் முடிவுறுத்தல் திகதியான 26.12.2019க்கும் இரண்டாவது கோவையின் ஆரம்பத் திகதியான 25.07.2020க்கும் இடையில் எந்தவொரு கோவையும் பேணப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியாயின் கணக்காளர் 11.02.2020 திகதிய கடிதத்தை எந்தக் கோவையில் பார்வையிட்டார்? அவ்வாறு ஒரு கோவை இருப்பின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக அதனை வழங்காமல் விட்டது ஏன்?

உள்ளகக் கணக்காய்வாளரின் ஆய்வு நடவடிக்கைகளிலேயோ அல்லது தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் ஆய்வு நடவடிக்கைகளிலேயோ எங்கும் இரண்டாவது கோவை இருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை. அது பற்றிய எந்தக் குறிப்பும் இடப்படவில்லை. ஆனால் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், கணக்காய்வு அத்தியட்சகருக்கு 15.05.2021 அன்று அனுப்பிய கடிதத்தில், ஒரே கோவையில் அதிக ஆவணங்கள் கோப்பிடப்பட்டிருந்தமையால் 2ஆம் கோவை தயாரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

2ஆம் கோவை உண்மையில் தயாரிக்கப்பட்டிருந்தால் அது ஏன் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு சமர்ப்பிக்கப்படாமல் மறைக்கப்பட்டது? கோவையை கணக்காய்விலிருந்து மறைப்பது குற்றம் என்பது தெரிந்தும் அதனை மறைத்திருப்பாரா?

(தொடரும்)



8. Chief Engineer Department of Building indicated in her letter on 11.02.2020 as progress was slow although the date of completion of this project was on 30.12.2019 according to the completion letter. Hence the contractor is liable to pay liquidity damage

9. Cheque number 541642 Rs.3, 000,000 drawn on 31.08.2020 to the Abaishan construction but this cheque had not been realized still

10. Active VAT registration does not confirm while making payment on 31.08.2020

11. Mobilization advance payment bond validity period does not extend up to recovery of full advance of the work on 31.08.2020

12. Check list did not attach in the project file and procurement file to easy monitoring and control of the activity

13. Significant weaknesses identified in the file maintenance, such as letter date not indicated by the sender and date stamp not affixed in letter available in the file

The above observations are forwarded for your information and action please.

Chief Internal Auditor
District Secretariat
Jaffna

K.Kamalarupan
Chief Internal Auditor
for Government Agent/District Secretary
District Secretariat
Jaffna

Copy to:
1. Director General
Department of Management Audit
Ministry of Finance
Colombo – 01

2. Assistant Auditor General
Auditor General's Department
Jaffna

3. Chief Internal Auditor
State Ministry of Home Affairs
"Nila Medura", Elvitigala Mawatha, Narahenpita, Colombo – 05

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

### 01.01.2022 முதல் 31.12.2022 வரை மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2022

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 22.10.2021 – 05.11.2021 மு.ப 10.30 மணி வரை**

**கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 05.11.2021 பி.ப 2.00 மணி வரை**

**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 05.11.2021 பி.ப 2.30 மணி**

| இல. | கச்சாய் உப அலுவலகம் | கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் ( மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம். | 13,292,600.00 | 132,900.00 | 750.00 |
| 2 | கொடிகாமம் மீன் சந்தை | 1,535,700.00 | 15,400.00 | 750.00 |
| 3 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 918,500.00 | 9,200.00 | 750.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,294,700.00 | 12,900.00 | 750.00 |
| 5 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல – 01 | 105,700.00 | 1,100.00 | 750.00 |
| 6 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல – 02 | 85,800.00 | 900.00 | 750.00 |
| 7 | களஞ்சிய அறை இல – 01 | 28,900.00 | 500.00 | 750.00 |
| 8 | களஞ்சிய அறை இல – 02 | 27,500.00 | 500.00 | 750.00 |
| 9 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 16,000.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் –01 | 19,500.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் – 02 | 22,100.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 03 | 17,600.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 69,000.00 | 700.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 6,900.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 15 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 204,600.00 | 2,000.00 | 750.00 |
| 16 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 271,700.00 | 2,700.00 | 750.00 |
| 17 | கைதடி பொதுச்சந்தை | 55,000.00 | 600.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 18 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 314,900.00 | 3,100.00 | 750.00 |
| 19 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 77,000.00 | 800.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 43,600.00 | 500.00 | 750.00 |
| 21 | மிருசுவில் பொதுச்சந்தை | 5,000.00 | 500.00 | 750.00 |
| 22 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 32,000.00 | 500.00 | 750.00 |
| 23 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 17,200.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 24 | நாவற்குழி பொதுச்சந்தை | 33,900.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:-**

01. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 22.10.2021 தொடக்கம் 05.11.2021 மு.ப 10.30 மணி வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
03. கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
04. 05.11.2021 ஆம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமூகமளிக்கலாம்.
05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
06. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
07. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
08. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
09. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**

**22.10.2021**

# முசலி பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல்- 2022

முசலி பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளுக்கான 2022 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான (01.01.2022 – 31.12.2022) கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 22.10.2021 தொடக்கம் 10.11.2021 வரை அலுவலக நாட்களில் பிற்பகல் 02.00 மணி வரையும் 11.11.2021ம் திகதி முற்பகல் 11.00 மணி வரையும் வழங்கப்படும்.

கேள்வி பிணைப்பணம் கேள்விப்பத்திரக் கட்டணம் ஆகிய தொகைகளை முசலி பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் செலுத்தி கேள்வி படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பப்பத்திரங்களில் ஒரு பிரதி விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு " தவிசாளர் / செயலாளர் முசலிப் பிரதேச சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " "................................"

மாட்டிறைச்சிக்கடைக்கான கேள்வி 2022" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மற்றய பிரதி 11.11.2021 ஆந் திகதி முற்பகல் 11.00 மணி முன் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார். என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 11.11.2021 முற்பகல் 11.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது . விண்ணப்பபத்திரங்கள் 11.11.2021 ஆந் திகதி முற்பகல் 11.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு கேள்விகள் அதே தினத்தில் முற்பகல் 11.30 மணிக்கு முசலிப் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில் கேள்வியாளர்கள் மாத்திரம் சமூகமளிக்க வேண்டும்.

சித்திகரமான கேள்விகாரர் 2022 ஆம் ஆண்டிற்கு முசலிப் பிரதேச சபை மாட்டிறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை செய்வதற்கு கேள்வி சபையால் / அரச விலைக் கட்டுப்பாட்டு திணைக்களத்தால் தீர்மானிக்கின்ற விலைகளில் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

முசலி பிரதேச சபையினால் கேள்விகள் ஏற்கும் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கும் கேள்விசபைக்கும் உரியது. குத்தகை நிலுவைகளை கொண்டிருப்போர், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் கேள்விக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை / தகவல்களை பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | வேப்பங்குளம் | 1000.00 | 8,500.00 | 426,585.00 |
| 02 | P.P.பொற்கேணி | 1000.00 | 4,000.00 | 214,170.00 |
| 03 | அகத்திமுறிப்பு | 1000.00 | 9,000.00 | 468,573.00 |
| 04 | பண்டாரவெளி | 1000.00 | 7,000.00 | 362,395.00 |
| 05 | அரிப்பு | 1000.00 | 9,000.00 | 468,270.00 |
| 06 | சிலாவத்துறை | 1000.00 | 13,000.00 | 665,512.00 |
| 07 | கொண்டச்சி | 1000.00 | 6,000.00 | 302,500.00 |
| 08 | மறிச்சுக்கட்டி | 1000.00 | 10,000.00 | 517,880.00 |

**18.10.2021**

**திரு ஏ.ஜீ.எச் .சுபிஹான்**
**தவிசாளர்**
**பிரதேச சபை முசலி**

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக"

# மரண அறிவித்தல்



## சுரேந்திரரட்ணம்-சிவபூரணம்

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுரேந்திரரட்ணம்-சிவபூரணம் நேற்று (21.10.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுரேந்திரரட்ணத்தின் மனைவியும், பிரியதர்சினியின் தாயாரும், சோமசுந்தரம் நல்லமுத்து தம்பதியரின் இளைய மகளும், இராசரட்ணம் இரத்தினம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பரமசிங்கம், சபானந்தன், சிவலட்சுமியின் சகோதரியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, விஜேந்திரரட்ணம் காலஞ்சென்ற ரவீந்திரரட்ணம், காலஞ்சென்ற சந்திரலேகா, புஸ்பராணி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனியும், தங்கரட்ணம் மகேந்திரராஜாவின் (உடுவில்) மாமியாரும், திவ்வியா, லக்ஷிகா, தரணிகா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (22.10.2021) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் உடுப்பிட்டி இமையாணன் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**மகள் - பிரியதர்சினி**

**077 134 6434**
**076 309 2864**

# மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 02 . 1942



இறப்பு
21 . 10 . 2021

## விஜயதர்மா கேதீஸ்வரதாசன்

**(தவிசாளர் - காரைநகர் பிரதேச சபை)**

காரைநகர் நீலிப்பந்தனையை பிறப்பிடமாகவும், மாப்பாணவூரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தபாலதிபர், இந்நாள் பிரதேச சபை தவிசாளர் விஜயதர்மா கேதீஸ்வரதாசன் நேற்று (21.10.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி விஜயதர்மா (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்) சொர்ணம்மா சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற கனகசபை-சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அபிராமிப்பிள்ளை அவர்களின் ஆருயிர்க் கணவரும், குமரேஸ்வரதாஸ் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், UK), Dr.சுவர்ணலலிதா (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிரபா (Finance - Equitable,Canada), Dr.கிருபா (கிளிநொச்சி - பொது வைத்தியசாலை), செந்தூர்க்குமரன் (மென்பொருள் பொறியியலாளர், USA), Dr.செந்தூர்வாசன் (ஹொரண தளவைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், Dr.ரவிச்சந்திரன், தம்பிராசா (Canada), Dr.டிலினி காஞ்சனா (USA), Dr.றிறானி பிரியதர்ஷினி (பாணந்துறை தளவைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுவேதன் (Canada), ஹரிணி சஞ்சனா (USA), புவனி சஷ்மித்தா (USA), நத்தாஷா வாசனி, பிரார்த்தனா வாசனி ஆகியோரின் அன்புப் பேரனும், Dr.மார்க் ஹெத்தவகே (UK), காலஞ்சென்றவர்களான கலாதேவி, சபாபதிப்பிள்ளை, தெய்வநாயகி, நளாயினிதேவி, சாம்பவமூர்த்தி, கந்தையாபிள்ளை (அமுதா ஜுவலரி), தனலட்சுமி, நித்தியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2021) வெள்ளிக்கிழமை மாட்பாணவூரி இல்லத்தில் முற்பகல் 10.00 - 12.00 மணிக்கு இடம்பெற்று, பின்னர் பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
மனைவி: +94772621385
செந்தூர் (மகன்) +1512 701 7889
பிரபா (மகள்) +15198855364
வாசன் (மகன்) +94 772914842

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மண்ணில் 19 . 11 . 1955



விண்ணில் 21 . 10 . 2021

## திரு. ஆறுமுகம் அருளானந்தம்
## (வெள்ளை அண்ணை)

சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும், இல.10, இராசவீதி, நல்லூர் சந்தை, நல்லூரைப் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அருளானந்தம் நேற்று (21.10.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - மகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை (ஐயாத்துரை) சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், வினிதாவின் அன்புக் கணவரும், விஜயராமின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தகுமார், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும், பவதாரணியின் மாமனும், இராசரத்தினம், வசந்தா, அரசரத்தினம் (ஜேர்மனி), குணரத்தினம் (UK), சிவரத்தினம் (UK), தவரத்தினம் (UK), ஆகியோரின் மைத்துனரும், திலகராணி, ஸ்ரீஸ்கந்தராசா, தேவிகா, கௌசா, றோசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2021) வெள்ளிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் சுகாதார முறைப்படி தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**

**இல.10, இராசவீதி,**
**நல்லூர் சந்தை, நல்லூர்.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## அமரர் கதிரவேலு பொன்னுச்சாமி

சாவகச்சேரி மட்டுவிலை பிறப்பிடமாகவும், பல்லவராயன்கட்டு முழங்காவிலை வதிவிடமாகவும் கொண்ட அமரர் கதிரவேலு பொன்னுச்சாமி அவர்கள் நேற்று (21.10.2021) காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு செல்லமுத்து தம்பதியரின் மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லத்துரை (சாவகச்சேரி), காலஞ்சென்ற தேவி (கிளிநொச்சி), இரத்தினம் (உருத்திரபுரம்), பரஞ்சோதி (ஓய்வுபெற்ற உதவிக் கல்வி பணிப்பாளர்-கிளிநொச்சி, அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (வன்னேரிக்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரும், சுகந்தி (ஹொலண்ட்), வசந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர், முழங்காவில்), சிறீதர் (லண்டன்), ஜெயந்தி (அதிபர், கிளிநொச்சி ம.வி), மனோகர் (பீடாதிபதி, அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சாந்தி (ஜெயபுரம்), முருகதாஸ் (பிரான்ஸ்), சிவானந்தி (அதிபர்; ஜெயபுரம் ம.வி), ஆனந்தி (லண்டன்), சிறீசங்கர் (மருத்துவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), தமயந்தி (ஆசிரியர், கிளி/முழங்காவில் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலேந்திரன் (ஹொலண்ட்), நாகராசா (முழங்காவில்), கிருபா (லண்டன்), தனபாலசிங்கம் (கிளிநொச்சி), பாலசதாமணி (அவுஸ்திரேலியா), கதிரவேற்பிள்ளை பழன் (ஜெயபுரம்), கல்பனா (பிரான்ஸ்), பரதன் (அதிபர், கிளி/ நாச்சிக்குடா அ.மு.க.பா), விஜயராஜா (லண்டன்), அனுசா (பொறுப்பு வைத்திய அதிகாரி மாகாண பயிற்சி நிலையம், கிழக்கு மாகாணம்), சந்திரகுமார் (ஆசிரியர், கிளி/கிராஞ்சி அ.த.க.பா) ஆகியோரின் மாமனாரும், சிவாரகா, துவாரகா, வதுசன், அனோஜன், ஆதித்தன், அனோஜா, நிதுஜன், புருசோத், விஸ்ணுகாந், கேமகள், அட்சயா, ஆசா, ஆர்த்திகா, கிருசன், டிந்துஜன், அபிநயா, ஜெயசாத், அருனோதயன், சோபிதா, அகல், குஜி, கிரிதரன், அனுதரன், ஆகியோரின் அன்புப் பேரனும், அகரவனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்காவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

# அரிசிகளின் விலைகள் எகிறுவதற்கு வாய்ப்பு!



**கொழும்பு, ஒக். 22**

**கீரிச் சம்பா அரிசியை ஒரு கிலோ 30 ரூபாவாலும், நாடு அரிசியை 15 ரூபா வாலும் அதிகரிக்க பொலநறுவையின் பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.**

இந்த விலை அதிகரிப்பிற்கேற்ப கீரிச் சம்பா ஒரு கிலோ 195 ரூபாவாகவும், சம்பா அரிசி ஒரு கிலோ 155 ரூபாவாகவும் நாட்டு அரிசி ஒரு கிலோ 130 ரூபாவாகவும் சந்தையில் விற்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் வெள்ளைப் பச்சை அரிசி ஒரு கிலோ 120 ரூபாவாகவும் சிவப்புப் பச்சை அரிசி ஒரு கிலோ 105 ரூபாவாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

(ம)

# மனிதர்களை உண்ணும் பிரன்ஹா இலங்கைக்குள்



கொழும்பு, ஒக்.22

மனிதர்களை உட்கொள்ளும் “பிரன்ஹா” என்னும் ஆபத்தான மீன் வகைகள் இலங்கையில் உள்ள நீர் நிலைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று வன ஜீவராசிகள் திணைக்களத்தின் உற்பத்தி பிரிவு மூத்த ஆய்வாளர் அஜித் குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது ஏதோ ஒரு வகையில் இந்த மீன் வகைகள் இலங்கையில் உள்ள நீர் நிலைகளில் விடப்பட்டுள்ளன. இந்த வகை மீன்கள் தியவன்னா ஓயா, களனி கங்கை, பொல்கொட குளம் ஆகியவற்றில் கண்டறியப்பட்டுள்ளன.

மீன் வளர்ப்புக்காக மீன் குஞ்சுகள் விடப்பட்டபோதோ அல்லது விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட மீன்கள் ஊடாகவோ இந்த மீன் இனம் இலங்கைக்குள் வந்திருக்கலாம். அல்லது வெள்ளம் போன்ற இயற்கை இடர்களால் இந்த மீன் இனம் வந்திருக்கலாம் -என்றார்.

(எ-இ)

# மரண அறிவித்தல்



## கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை
### (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்)

இளவாலை கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் 21-10-2021 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் மாவிட்டபுரம் சின்னத்தம்பி சுப்பிரமணியம், இளவாலை சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும், இணுவில் - இளவாலை காலஞ்சென்ற சிவகாமசுந்தரி அவர்களின் பேரன்புமிக்க கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா உலகநாதன் (வசாவிளான்), செல்வநாயகி சண்முகலிங்கம் (இணுவில்), செல்வமணி இராசேந்திரம் (இளவாலை) ஆகியோரின் சகோதரரும், நாவரசன் (லண்டன்), மாவிரதன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேகா (இலண்டன்), பிரகாஜினி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமாவும், இலண்டன் நிலான், சுகான், இலங்கை அட்சயா, சிவகர்சா, அபிலோசன் ஆகியோரின் பேரன்புமிக்க அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக அவரது இளவாலை இல்லத்தில் இன்று காலை 10மணியளவில் பார்வைக்காக வைக்கப்பட்டு, மு.ப. 11 மணியளவில் அவர் இறுதிக்காலத்தில் வாழ்ந்த ஏழாலை இல்லத்தில் இறுதிக்கிரியைகள் பிற்பகல் 3மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்தில் நடைபெறும்.

**தகவல் மைந்தர்கள்**

**நாவரசன் (இலண்டன்) 00447985269135**

**மாவிரதன் (இலங்கை) 0094773867070**

# ஸ்கொட்லாந்து அணி ஜெர்சியை வடிவமைத்த 12 வயதுச் சிறுமி!

டுபாய், ஒக். 22

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் தகுதிச்சுற்றில் பங்கேற்றுவரும் ஸ்கொட்லாந்து அணி அணிந்துள்ள ஜெர்சியை அந்த நாட்டைச் சேர்ந்த 12 வயது மாணவி வடிமைத்துள்ளார்.

ரெபேக்கா டவுனி என்ற 12 வயதுச் சிறுமியே தனதுநாட்டு அணிக்காக இந்த ஜெர்ஸியை வடிமைத்துள்ளார்.

ரெபேக்கா வடிமைத்த இந்த ஜெர்சி, அனைவரையும் கவர்ந்ததை அடுத்து அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஸ்கொட்லாந்து அணிக்காக ஜெர்சியை வடிமைக்க பள்ளி மாணவர்களிடம் ஸ்கொட்லாந்து அணி நிர்வாகம் கேட்டிருந்தது. ஏறக்குறைய 200 பள்ளிகளிடம் இருந்து ஜெர்ஸிக்கான டிசைன்கள் வந்திருந்தன.




இவற்றில் ரெபேக்கா வடிவமைத்த ஜெர்சியில் ஸ்கொ ட்லாந்து நாட்டின் தேசியக் கொடியின் வர்ணம், சின்னம் ஆகியவை இருந்ததால் இது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2022

கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2022 ஆம் ஆண்டிற்கு (01.01.2022 - 31.12.2022) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 25.10.2021 – 05.11.2021 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 05.11.2021 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 05.11.2021 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் “சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகை - 2022” என எழுதி மூலப்பிரதியை **“செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்”** என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை **“பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்”** என்னும் முகவரிக்கும் எதிர்வரும் **05.11.2021 ஆம்** திகதி பி.ப **02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 500.00 | 25,000.00 | 11,005,500.00 | |
| 02 | அக்கரை கடற்கரை – வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடல் | 500.00 | 2000.00 | 68,200.00 | 500.00 |
| 03 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | 1,650,055.00 | 1200.00 |
| 04 | அச்சுவேலி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 1,172,105.00 | 1200.00 |
| 05 | வளலாய் - தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 313,500.00 | |
| 06 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 288,190.10 | 250.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | 2,387,000.00 | 500.00 |
| 02 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 385,000.00 | |
| 03 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 346,500.00 | 500.00 |
| 04 | நிலாவரை திறந்த வெளிச்சந்தையும் வாகன தரிப்பிடமும் | 500.00 | 2000.00 | 1,331,000.00 | |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01 | கோப்பாய் மீன் சந்தை | 500.00 | 2000.00 | 146,300.00 | |
| 02 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | 2,565,200.00 | 2250.00 |
| 03 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 623,700.00 | 2250.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 1,789,260.00 | 2250.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 683,210.00 | 2250.00 |
| 03 | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 3000.00 | 694,705.00 | |
| 04 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 500.00 | 3000.00 | 486,200.00 | 2250.00 |

**01.** சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

**02.** கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமூகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சார கட்டணப் பட்டியல்/ வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**03.** கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும்.

**04.** உள்ளூராட்சி மன்றங்களினால் “தவறுனராக” கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

**05.** ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

**06.** கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

**07.** விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்

**08.** சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

**09.** உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**10.** சபையின் அச்சுவேலி கொல்களத்தினை ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2021.10.22

## மரண அறிவித்தல்

### திருமதி தில்லைராஜேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைராஜேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி கடந்த (20.10.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி- அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையா - வள்ளி நாயகி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னையா கிருஷ்ணமூர்த்தியின் அன்புமனைவியும், திவ்யா (நில அளவை திணைக்களம் கொழும்பு), சௌம்யா (உள்ளக கணக்காய்வுப் பிரிவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. மயூரேணின் (வைத்திய நிபுணர் கொழும்பு தேசிய வைத்தியசாலை ) பாசமிகு சிறிய தாயாரும், லாவண்யா (ஆசிரியை-பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), செந்தூரன் (சிரேஷ்ட கணக்காய்வு முகாமையாளர் Kreston & MNS Co.), மாதங்கி, நர்த்தனன், வித்தகன், சுபாங்கி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, மங்கையற்கரசி மற்றும் புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரமகுருநாதன், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற பொன்னம்பலவாணர் மற்றும் இந்திராதேவியினரதும் மைத்துனியும், சோமசுந்தரம், கமலாம்பிகையின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.10.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் Covid நடைமுறைகளைப் பின்பற்றி குடும்ப உறுப்பினர்களுடன் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 169 8348

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 |  | 21 |
| 02 | | 10 |
| 1952 | | 2021 |

### ஐயாத்துரை இராசரத்தினம்

இணுவிலை பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராசரத்தினம் அவர்கள் நேற்று (21.10.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சூரித்தம்பி கதிராசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், யோகராணியின் பாசமிகு கணவரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் மகேஸ்வரி, நாகராசா, விஜயராணி காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பேபி சறோஜா, மற்றும் கமலறோஜனி, காலஞ்சென்ற தேவச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற லெனின் பிரபா மற்றும் இராஜபிரதீபா (பிரான்ஸ்), ரஜிவ்காந் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிஷாந்தினி (ஆசிரியை, கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) தர்மதாஸ் (பிரான்ஸ்) விதுர்ஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், மிஷானா, கௌதமன், பொலின், அபிஷேக் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2021) வெள்ளிக்கிழமை பூமகள் வீதி அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்
077 325 7477

## பேருந்து சங்கத்தின் அறிவித்தல்

கலைக்கப்பட்ட கிளிநொச்சிமாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தின் கூட்டம் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜமுனாதரன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவு சங்க கட்டிடத்தில் எதிர்வரும் (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். தகுதி உள்ள அனைத்து தனியார் பேருந்து உரிமையாளர்களும், மற்றும் இடை நிறுத்தப்பட்ட பணியாளர்களும் தவறாது சமூகமளிக்குமாறு அவரால் கோரப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு : 076 222 1977

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் வீக்கம், விறைப்பு, நரம்பு செயலிழப்பு, அல்சர் தீராத புண், முழங்கால் வாதம், தீவிர நிலை கொண்ட பாரிசவாதம் உடனடி நிவாரணம்.

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு)
மானிப்பாய். 077 321 2740



## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
## பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் 2022

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி | :- 05.11.2021 வெள்ளிக்கிழமை நண்பகல 12.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | :- 05.11.2021 வெள்ளிக்கிழமை பி .ப 02.00 மணிவரை |
| கேள்விகள் திறக்கப்படும் திகதி | :- 05.11.2021 வெள்ளிக்கிழமை பி .ப 02.30 மணி |

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 56,100.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 49,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 24,350.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 11,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 121,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 726,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 110,550.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 585,600.00 | 10,000.00 | 1,000.00 |
| 09 | இறால்மடம் சந்தை | ..... | 25,000.00 | 1000.00 | 1,000.00 |
| 10 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 1,000.00 | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 11 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 540,200.00 | 10,000.00 | 1,000.00 |
| 12 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,250.00 | 662,200.00 | 10,000.00 | 1,000.00 |
| 13 | கும்பலைச்சந்தை | ...... | 331,150.00 | 5,000.00 | 1,000.00 |
| | **தெல்லிப்பளை உப அலுவலகம்** | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | ........ | 22,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக்கடை | 1,050.00 | 77,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 16,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | கணேஸ்வரம் சந்தை | ......... | 44,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | கணேஸ்வரம் சந்தை கோழிக்கடை | 1,000.00 | 55,100.00 | 1,000.00 | 1,000.00 |
| | **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை | .......... | 347,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 629,200.00 | 10,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 490,700.00 | 5,000.00 | 1,000.00 |
| 04 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 20,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 11,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | குரும்பசிட்டி சந்தை | .......... | 11,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 07 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,000.00 | 40,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 166,230.00 | 1,000.00 | 1,000.00 |
| | **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | .......... | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,000.00 | 56,200.00 | 1,000.00 | 1,000.00 |

**குறிப்பு :**

- விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாதவாடகையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடாத்திய பிரதேசசபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடிதஉறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒருபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி, காங்கேசன்துறை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்படிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- சந்தையை குத்தகைக்கு எடுப்பவரால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

22.10.2021

திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.
தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை.
வலிகாமம் வடக்குபிரதேச சபை,
காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி).


## ஆசிரியர்கள்...

கள் நேற்று ஆரம்பமாகின. 440 அதிபர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளித்துள்ளனர். 3 ஆயிரத்து 655 ஆசிரியர்கள் உள்ள நிலையில் ஆயிரத்து 906 பேர் நேற்று சமுகமளித்துள்ளனர். 34 ஆயிரத்து 845 மாணவர்களில் 7 ஆயிரத்து 377 பேர் பாடசாலைக்கு நேற்றுச் சென்றுள்ளனர்.

வலய ரீதியாக பதிவாகிய வரவின் அடிப்படையில் யாழ். கல்வி வலயத்தில் அதிபர்கள் 80.35 வீதமும், ஆசிரியர்கள் 55.13 வீதமும், மாணவர்கள் 18.41 வீதமும் வருகை தந்தனர்.

வலிகாமம் வலயத்தில் அதிபர்கள் 28 வீதமும், ஆசிரியர்கள் 32.42 வீதமும், மாணவர்கள் 13.39 வீதமும் வருகை தந்தனர்.

வடமராட்சி வலயத்தில் அதிபர்கள் 36.17 வீதமும், ஆசிரியர்கள் 20.70 வீதமும் மாணவர்கள் 14.97 வீதமும் வருகை தந்தனர்.

தென்மராட்சி வலயத்தில் அதிபர்கள் 30.43 வீதமும், ஆசிரியர்கள் 21.9 வீதமும் மாணவர்கள் 4.28 வீதமும் வருகை தந்தனர்.

தீவக வலயத்தில் அதிபர்கள் 100 வீதமும், ஆசிரியர்கள் 90.59 வீதமும் மாணவர்கள் 52.17 வீதமும் சமுகமளித்தனர்.

கிளிநொச்சி வடக்கு வலயத்தில் அதிபர்கள் 77.27 வீதமும், ஆசிரியர்கள் 45.89 வீதமும் மாணவர்கள் 27.77 வீதமும் வருகை தந்தனர்.

கிளிநொச்சி வலயத்தில் அதிபர்கள் 76 வீதமும், ஆசிரியர்கள் 39 வீதமும் மாணவர்கள் 11 வீதமும் சமுகமளித்தனர்.

மன்னார் வலயத்தில் அதிபர்கள் 78 வீதமும், ஆசிரியர்கள் 69 வீதமும் மாணவர்கள் 37 வீதமும் வருகை தந்தனர்.

மடு வலயத்தில் அதிபர்கள் 100 வீதமும், ஆசிரியர்கள் 72.22 வீதமும் மாணவர்கள் 36.16 வீதமும் சமுகமளித்தனர்.

வவுனியா வடக்கு வலயத்தில் அதிபர்கள் 97 வீதமும், ஆசிரியர்கள் 71 வீதமும் மாணவர்கள் 31 வீதமும் வருகை தந்தனர்.

வவுனியா தெற்கு வலயத்தில் அதிபர்கள் 100 வீதமும், ஆசிரியர்கள் 32 வீதமும் மாணவர்கள் 8 வீதமும் சமுகமளித்தனர்.

முல்லைத்தீவு வலயத்தில் அதிபர்கள் 88 வீதமும், ஆசிரியர்கள் 66.7 வீதமும் மாணவர்கள் 17.52 வீதமும் வருகை தந்தனர்.

துணுக்காய் வலயத்தில் அதிபர்கள் 62.5 வீதமும், ஆசிரியர்கள் 60.6 வீதமும் மாணவர்கள் 16.1 வீதமும் வரவு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ஓ,5)


## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியிலுள்ள வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. (பெண்கள் மட்டும்)

077 066 2022, 021 224 3312

## வீடு வாடகைக்கு

இராச வீதி, திருநெல்வேலி கிழக்கில் (கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து 300 m தூரத்தில்) 4 அறைகள் 2ஹோல் இணைந்த குளியலறைகளுடன் வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு 077 695 5490

### நீதியை...

இவ்வாறு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இளந்தவறாளர்கள் (பயிற்சிப்பாடசாலைகள்) (திருத்தச்) சட்டவரைவு மற்றும் தண்டனைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர், மேலும் தெரிவிக்கையில்,

"நீதி அமைச்சர் அலி சப்ரி இங்கு கொண்டு வந்துள்ள சட்டவரைவுகள் பகுதி பகுதியாக முன்வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக குற்றவியல் சட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்கள் தனித்தனியாகவே முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, திருத்தங்களை இவ்வாறு முன்னெடுப்பது கடினம். இது குழப்பங்களையும் ஏற்படுத்தும். ஒரு சில சந்தர்ப்பங்களில் சட்டங்களை சவாலுக்கு உட்படுத்தும். இவ்வாறான வேளையில் எம்மாலும் பல காரணிகளைத் தவறவிட நேரிடும்.

இங்கு தண்டனைச் சட்டக்கோவையில் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன, அதனை நாம் வரவேற்கிறோம், ஆனால் சாவுத் தண்டனை குறித்து ஏன் இறுக்கமான தீர்மானம் எடுக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது.

இதேவேளை, அண்மையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளுக்கு எதிராக ஒரு இராஜாங்க அமைச்சர் செயற்பட்ட விதம் குறித்து சாட்சியங்கள் இருந்தும், அவரது அமைச்சுப்பதவி பறிபோகவில்லை. அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது ஒன்றே இதற்கு நல்ல உதாரணம்.

சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் என்றால் இன்று சிறைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் எவரும் சிறைப்படுத்தப்பட்டிருக்கமாட்டார்கள். ஒரு தனி நபர் கூட இருக்கமாட்டார்" - என்றார். (து-22)

### 3 மாதங்களில்....

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இறுதிப் போரில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுக்கு என்ன நடந்தது? கொல்லப்பட்ட சிறுவர்களுக்கு எப்போது நீதி கிடைக்கும்? எனவும் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இளந்தவறாளர்கள் (பயிற்சிப்பாடசாலைகள்) (திருத்தச்) சட்டவரைவு மற்றும் தண்டனைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவு மீதான நேற்றைய விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கில் இறுதிக்கட்டப் போர் நடந்த 2009ஆம் ஆண்டு பல சிறுவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். குறிப்பாக 18.05.2009 ஆம் ஆண்டில் முன்னாள் போராளிகளின் பிள்ளைகள் இவ்வாறு இராணுவத்திடம் தாய் தந்தையுடன் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தக்காலக் கட்டத்தில் நான் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றினேன். அப்போது என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள்கூட இந்த பட்டியலில் உள்ளனர். அவர்கள் அப்போது ஆறாம் ஏழாம் தரங்களில் கல்வி கற்றனர். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகனும் ஆறாம் ஆண்டில் படித்து, இவர்களுடன் இராணுவத்தில் சரணடைந்து கொல்லப்பட்டவர்களில் ஒருவராகவுள்ளார்.

இவ்வாறு உயிருடன் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது?

கொரோனாக் காலத்தில் கடந்த மூன்று மாதங்களில் யாழப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த 39 பேர் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு, இரவிரவாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு மற்றும் கிளிநொச்சியில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு, சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு, கைதுசெய்யப்பட்டுள்ளனர். உயிரோடு ஒப்படைக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகளுக்கு நீதி கிடைக்குமா?" எனக் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் முழுப் பெயர் விவரங்களையும் அவர் சபையில் ஆவணப்படுத்தினார். (து-22)

### காரணமின்றி....

முறையிடுவதன் மூலம் அந்தக் குழு அது தொடர்பில் ஆராய்ந்து ஜனாதிபதிக்கு பரிந்துரை முன்வைத்த பின்னர் ஜனாதிபதி அவ்வாறானவர்கள் தொடர்பில் முடிவெடுப்பார்."

இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று, இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டவரைவு, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவு ஆகியவற்றை சமர்ப்பித்தும் பதிலளித்தும் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நீதித்துறையுடன் தொடர்புள்ள 60 அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் முக்கியமான யோசனைகள். சமூக வலைத்தளங்கள் தொடர்பில் மேற்பார்வை அவசியம் எனப் பலரும் கருத்தை முன்வைத்தனர்.

கருத்துச்சுதந்திரத்துக்கு தடை போடமாட்டோம். ஆனால், சமூக வலைத்தளங்களின் மூலம் குரோதத்தை வளர்க்க இடமளிக்க முடியாது. பொய்யான விடயங்களை முன்வைத்தால் வழக்குத்தொடரக் கூடிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். பெண்களின் உரிமை தொடர்பில் விடயங்கள் உள்ளடக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிகள் கருத்துக்களை முன்வைத்தார்கள். இது தொடர்பில் பரவலாக ஆராயப்படுகிறது. எனது கோரிக்கைக்கு அமைவாக 41 வருடங்களின் பின்னர் ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் ஆலோசனைக் குழுவொன்றை நியமித்துள்ளார். எவராவது தவறாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பில் இந்தக் குழுவுக்கு தெரிவிக்கலாம். இந்தக் குழு ஆராய்ந்து ஜனாதிபதிக்கு பரிந்துரை முன்வைக்கும். 46 பேர் தொடர்பில் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து முடிவெடுப்பார்.

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் மீளாய்வு செய்ய ஜி.எல்.பீரிஸ் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்" - என்றார். (து-22)

### தமிழ்...

மாறும், சட்டமா அதிபரின் கலந்தாலோசனையுடன், அது பற்றி உயர்நீதிமன்றுக்குத் தெரியப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கும் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று பரிசீலனைசெய்த உயர்நீதிமன்றம் அந்த மனுவை விசாரணைக்கு ஏற்று, மேற்படி இடைக்காலக் கட்டளைகளையும் பிறப்பித்தது. குறித்த அரசியல் கைதிகள், அநுராதபுரம் சிறையிலேயே இருக்கவிருப்பம் தெரிவித்தால், அங்கேயே அவர்களை பாதுகாப்பாக தங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறும் உயர்நீதிமன்று கட்டளையில் சுட்டிக்காட்டியது.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற அப்போதைய சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை முழங்காலில் மண்டியிடச் செய்து, தலையில் கைத்துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் காமினி அமரசேகர, யஸந்த கோட்டாகொட, ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் மனுதாரர்களின் திருத்தப்பட்ட சத்தியப் பிரமாணப் பத்திரங்களின் அடிப்படையில் அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோருக்கு எதிராகச் சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கள் அரசமைப்பின் 11 ஆவது பிரிவின் கீழ் முன்வைக்கப்படுகின்றமையால் அவர்கள் இருவர் சார்பிலும் சட்டமா அதிபரின் பிரதிநிதிகள் எவரும் மன்றில் முன்னிலையாக மாட்டார்கள் என சட்டமா அதிபர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மனுவைப் பரிசீலித்த நீதியரசர்கள், அரசமைப்பின் 11 ஆம் பிரிவின் கீழான சித்திரவதைக்கு எதிரான சுதந்திரம், 12(1) ஆம் பிரிவின் கீழான சமத்துவமாக நடத்தப்படுவதற்கான உரிமை மற்றும் 12(2) ஆம் பிரிவின் கீழான இன, மத, மொழி, சாதி, பாலினம், அரசியல் நிலைப்பாடு, பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமை ஆகிய பிரிவுகளின் கீழ் மனுவை விசாரணைக்கு ஏற்கின்றனர் என அறிவித்தனர். சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ரஜீவ குணதிலக முன்னிலையானார். (து-22)

### மருத்துவமனையில்...

"இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் உறவுகள், இந்த மருத்துவமனை வளாகத்தில் தூபியொன்றை அமைப்பதற்கு இடம் ஒதுக்கித்தருமாறு நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். அந்த விடயம் தொடர்பில், இந்த மருத்துவமனையின் பல்வேறுபட்ட குழுக்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், பொருத்தமான இடமொன்று தெரிவு செய்யப்பட்டு, நினைவுத்தூபி அமைக்கப்படும்" என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (து-10)

### திலீபன் எம்.பிக்கு....

ளுமன்ற உறுப்பினருக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லை" என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைத் தலைவர் நேசராஜா தெரிவித்தார்.

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், அவற்றின் திறப்புக்களை வலயக்கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் கூறியிருந்தமை தொடர்பில் கேட்டபோதே, நேசராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார். அதிபர், ஆசிரியர்கள் தற்போது பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இது தொழிற்சங்க போராட்டம். இந்தநிலையில், திறப்புக்களை ஒப்படைக்குமாறு அதிபர்களிடம் எவரும் கேட்கமுடியாது. அவ்வாறான ஒரு தேவை இருப்பின் மாகாண கல்வி திணைக்களத்தினூடாக அவர் அறிவுறுத்தல் வழங்கவேண்டும் - என்று நேசராஜா மேலும் தெரிவித்தார். (து-110)

### பாடசாலைத்...

யில் ஒப்படைக்குமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் முதற் கட்டமாக 85 பாடசாலைகளை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டநிலையில் அதிபர், ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் பல பாடசாலைகள் பூட்டப்பட்டிருந்தன. இதனால் மாணவர்கள் பாடசாலைகளுக்குள் செல்ல முடியாது திரும்பிச் சென்றிருந்தனர். இந்தநிலையில், அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் பேசியிருக்கின்றேன். ஏற்கனவே எமது மாவட்டத்தின் கல்வி பெருவீழ்ச்சியைக் கண்டுள்ளது. இந்தநிலையில், புறக்கணிப்பு மிகவும் வேதனையாக இருக்கின்றது - என்றும் அவர் தெரிவித்தார். (து-18)

### காரைநகர்....

யின் தவிசாளரான விஜயதர்மா கேதீஸ்வரதாசன் (வயது - 79) நேற்றுக்காலமானார்.

கொரோனாத்தொற்றால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்திருந்தார். எனினும், அதன்பின்னரான நோய் நிலைமைகள் காரணமாக அவர் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

அவர், 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று தவிசாளர் ஆனார். அதற்கு முன்னர், 34 வருடங்கள் சிரேஷ்ட தபாலக அதிகாரியாக கடமையாற்றியிருந்தார்.

அவரது இறுதிக் கிரியைகள், அவரது வீட்டில் இன்று மதியம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-319,50)

### இந்திய....

கள், பொதுச்சுடர்ஏற்றி திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

சுகாதார நடைமுறைகளின்படி, மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினருடன் குறித்த நிகழ்வு நடைபெற்றது. நினைவேந்தலில், மருத்துவமனையின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1987ஆம் ஆண்டு யாழ்.போதனா மருத்துவமனைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினர், கடமையிலிருந்த 21பேரை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி படுகொலை செய்தனர். அந்தப் படுகொலையின் பின்னர் போதனா மருத்துவமனை ஊழியர்கள் வருடாவருடம் நினைவேந்தலில் ஈடுபட்டுவருகின்றனர். (து-20)

### ஒரு பிள்ளையின்...

ஒரு குழந்தையின் தாயாரான அவர், தனது கணவனுடன் முரண்பட்டுக்கொண்டு தாய் வீட்டுக்குச்சென்று, கடந்த 14ஆம் திகதி காலை தனக்குத் தானே தீ மூட்டிக்கொண்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (து-26)

© 2000 Agfa-Gevaert N.V.

# ரி-20 உலகக்கிண்ணத்தில் பிரதான சுற்றில் இலங்கை

## அயர்லாந்தை இலகுவாக பந்தாடியது






டுபாய், ஒக். 22

**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் அயர்லாந்தை இலகுவாகப் பந்தாடியது இலங்கை அணி.**

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இரு பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்தது.

குசல் பெரேரா, அவிஸ்க பெர்னாண்டோ இருவரும் ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் 'கோல்டன் டக்' முறையில் வெளியேறினார்கள். சந்திமலால் முடிந்தது வெறும் 6 ஓட்டங்கள் மட்டுமே. பத்தும் நிஷங்க, வனிந்து ஹசரன்க இருவரும் இணைந்து அணியை மீட்டெடுத்தனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைக் கடந்தது.

71 ஓட்டங்களுடன் ஹசரன்கவும், 61 ஓட்டங்களுடன் பத்தும் நிஷங்கவும் ஆட்டமிழந்தனர்.

பின்வரிசையில் டசுன் சானக 11 பந்துகளில் 21 ஓட்டங்களைக் குவித்தார். முடிவில் 7 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது.

பந்துவீச்சில் ஜொஸ் லிட்டில் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான ஸ்ரிர்றிங், கெவின் ஓபிரைன் இருவரும் ஏமாற்றினர்.

அணித்தலைவர் பல்பிரைன் 41 ஓட்டங்களைப் பெற்றார். சாம்பெர் 24 ஓட்டங்களைச் சேர்த்தார். எனினும், பெரிதான தாக்கத்தை அயர்லாந்தால் செலுத்த முடியவில்லை.

101 ஓட்டங்களில் அயர்லாந்து அணி அனைத்து இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் தீக்சன 3 இலக்குகளையும், கருணாரத்ன, லகிரு குமார இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

# மெஸ்ஸியின் அபார ஆட்டத்தால் பி.எஸ்.ஜி. அசத்தலான வெற்றி!




பாரிஸ். ஒக். 22

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி அபார வெற்றிபெற்றது.

பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியை எதிர்த்து லிப்ஷிக் அணி மோதியது. ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் பி.எஸ்.ஜியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மப்பே. 28ஆவது நிமிடத்தில் லிப்ஷிக்கின் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் அந்ரே டி சில்வா.

57ஆவது நிமிடத்தில் நோர்டி பதிவு செய்த கோலால் லிப்ஷிக் அணி முன்னிலை பெற்றது. அதன் பின்னர் 67ஆவது 74ஆவது நிமிடங்களில் மெஸ்ஸி கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வென்றது பி.எஸ்.ஜி.

(ம)

# ரி-20 உலகக்கிண்ணத்தை இந்தியா கைப்பற்றும்



டுபாய், ஒக். 22

ரி-20 உலகக்கிண்ணத் தொடரை இந்தியா கைப்பற்றும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தத் தொடரிலும் ஒரு குறிப்பிட்ட அணிதான் வெல்லும் எனக் கணிப்பது கடினம், அவ்வாறு கூற முடியாது.

ஆனால், எந்த அளவு வெற்றிக்கான வாய்ப்புக் குறித்துக் கூற முடியும். என்னைப் பொறுத்தவரை, இந்த ரி-20 உலகக்கிண்ணத்தில் சம்பியன் பட்டம் வெல்ல இந்திய அணிக்கு மிகப்பெரிய வாய்ப்பிருக்கிறது.

சூழல் அதற்குச் சாதகமாக இருக்கிறது. இந்திய அணியில் இருப்போர் அனைவரும் ரி-20 ஆட்டங்களில் அதிகமாக விளையாடிய அனுபவம் உடையவர்கள்.

விராட் கோலி துடுப்பெடுத்தாடாமலேயே ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் 153 ஓட்டங்களைச் சேஸிங் செய்யும்போது, இப்போதுள்ள சூழலில் இந்திய அணி மிகுந்த ஆபத்தான அணி என்பதை நிரூபித்துவிட்டார்கள். ஆஸ்திரேலியா, இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டங்களை இந்திய அணி எளிதாகக் கையாண்டது - என்றார். (ம)

# ஐ.பி.எல். தொடரிலும் மன்செஸ்டர் யுனைட்டெட்

புதுடில்லி, ஒக். 22

ஐ.பி.எல். தொடருக்கான அணியொன்றை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது மன்செஸ்டர் யுனைட்டெட்.

அடுத்த ஐ.பி.எல். தொடரில் இரண்டு அணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி 10 அணிகள் அடுத்தவருட ஐ.பி.எல். தொடரில் விளையாடவுள்ளன். இந்த அணிகள் எவை என்பது தொடர்பில் எதிர்வரும் வாரம் அறிவிக்கப்படவுள்ள நிலையில், அந்த அணிகளில் ஒன்றை வாங்குவதற்கு பிரபல கால்பந்தாட்டக்கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் விருப்பம் தெரிவித்துள்ளது.

(ம)


# மரண அறிவித்தல்

மலர்வு 27 . 11 . 1951

உதிர்வு 20 . 10 . 2021



## பழனி மகேந்திரன்

குலனை, அராலி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், விதானை வளவு, பிரதான வீதி, தொண்டைமானாறை வதிவிடமாகவும் கொண்ட பழனி மகேந்திரன் அவர்கள் 20.10.2021 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பாலநாதன், இராஜலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தேவராஜா காலஞ்சென்ற கமலோஜினி ஆகியோரின் மருமகனும், இராஜினியின் அன்புக் கணவரும், எதிராஜ், மதிராஜ், நிதிராஜ், நளாயினி, சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாமந்தி ( நீதிமன்றப் பதிவாளர், மாவட்ட நீதிவான் நீதிமன்றம், மல்லாகம்), அம்பரீசன் (நிறைவேற்று உத்தியோகத்தர், சிலிங்கோ லைவ், கொழும்பு), சாம்பவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபிரகாஷ் (முகாமையாளர், கொமர்ஷல் கிறெடிற், கிளிநொச்சி), அகிலதாஸ், மேரிஆன் ( இலங்கை வங்கி உத்தியோகத்தர், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்ஷணன், கர்ஷணன், ப்ருத்வீன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22.10.2021 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் விதானைவளவு, பிரதான வீதி, தொண்டைமானாறு என்ற முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

(077) 412 3300 - ச. சிவபிரகாஷ் (மருமகன்)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.